JL
m211, N52, SV
N59.12.4
134078

# சர்வோதயம்

மலர் 12 பிப்ரவரி 1959 இதழ்

OFFICE OF THE REGISTRAR ... FEB 1959 MADRAS





" சத்தியாக்ரஹமின்றி சர்வோதயம் சாத்யமி
சத்தியத்தில் ஆக்ரஹம் அல்லது உறுதி இல்லாதபெ
அஹிம்சையும் இருக்க முடியாது. ஆசையால் ச
தயம் கைகூடுவது அஹிம்சைக் கைகூடுவதைப் பெ
திருக்கிறது. அஹிம்சை கைகூடுவதோ தவ ஒழுக்கத்
பொறுத்தது."

மகாத்மா கா

வருஷ சந்தா ரூ. 3 ★ தனிப்பிரதி 25 நயா பை

சர்வோதயப் பிரசுராலயம் தஞ்சாவூர்

# எமது காந்திய-சர்வோதய இலக்கியம்

சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்

## காந்திய இலக்கியம்

| | ரூ ந.பை. |
|---|---|
| சர்வோதயம் | ... 0-25 |
| காந்திக் காட்சிகள் | ... 1-25 |
| பாப்பாவின் காந்தி | ... 0-75 |
| பாபூ—என் தாய் | ... 0-75 |
| எமது பா—இரண்டு பாகங்கள் | 2-50 |
| காந்திய நவநீதம் | ... 1-50 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | ... 1-00 |
| சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் | ... 0-25 |
| காந்தி ஆசிரம பஜனாவளி | ... 0-50 |
| கீதா போதனை | ... 0-75 |
| காந்தியும் மார்க்ஸும் | ... 1-25 |
| பாபு அல்லது நானறிந்த காந்தி | ... 2-50 |
| ராம நாமம் | ... 0-75 |
| நீதி தர்மம் | ... 0-25 |
| சத்தியமும் கடவுளும் | ... 0-19 |
| சத்யாக்கிரகம் | ... 1-00 |
| மகாத்மா காந்தியின் சுயசரிதம் (சுருக்கம்) | ... 1-50 |
| ரகுபதி ராகவ | ... 0-75 |
| மகாத்மா காந்தி நூல்கள் : தொகுதி 1 | ... 7-50 |
| தொகுதி 2 | ... 7-50 |

## விநோபாஜீயின் பொது நூல்கள்

| | |
|---|---|
| கீதைப் பேருரைகள் (மலிவுப்பதிப்பு) | ... 1-00 |
| காலிகோ பைண்டு | ... 2-25 |
| கல்விச் சிந்தனைகள் | ... 1-50 |
| ஸ்வராஜ்ய சாஸ்திரம் | ... 1-00 |

## பூதான இலக்கிய செட்

| | ரூ. ந பை. |
|---|---|
| பூரண கிராமதானம் | ... 0-25 |
| கிராமந்தோறும் சுயராஜ்யம் | ... 0-12 |
| மங்கரோட்—முதல் கிராமதானம் | 0-25 |
| ஒன்று பட்டால் உண்டு வாழ்வு | ... 0-12 |
| கிராமங்களுக்கு ஆரோக்கியத் திட்டம் | ... 0-12 |
| சர்வோதய ஆதாரங்கள் | ... 0-25 |
| பூதான ஐய விளக்கம் | ... 0-25 |
| பூதான வெள்ளம் | ... 0-50 |
| சம்பத்துதான யக்ஞம் | ... 0-25 |
| உழைப்பு தானம் | ... 0-37 |
| சமூகப் பாத யாத்திரை | ... 0-25 |
| ஒரு மாபெரும் அநீதி | ... 0-37 |
| விநோபாவின் குரல் | ... 0-50 |
| மூன்று ஞானிகள் (வள்ளுவர், காந்தி, விநோபா) | ... 0-50 |
| வணிகரே வாரீர்! | ... 0-12 |
| பாரத தேவியின் திருவடியில் பாபா | ... 0-12 |
| பூதானப் பாடல்கள் | ... 0-06 |
| சுதந்திர இந்தியாவில் அதிகாரிகளின் கடமை | ... 0-20 |
| ஜீவன் தானம் | ... 0-12 |
| விநோபா வாழ்க்கை | ... 0-20 |

## கதர் இலக்கியம்

| | |
|---|---|
| நூற்புக் கணிதம் (நான்கு பாகங்கள்) | ... 2-74 |
| தக்ளியால் நூற்பது எப்படி? | ... 0-62 |
| நூற்புக் கலையின் நுணுக்கங்கள் | 1-25 |
| கதர்த் தத்துவமும் சேவையும் | 0-75 |
| பட்டை போட சுலப வழி | ... 0-25 |
| கதர் நெசவு | ... 0-50 |

**"சர்வோதயம்"**
மாதப் பத்திரிகை
தனிப்பிரதி விலை 25 ந. பை.
வருட சந்தா : ரூ. 3
சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்

**"கிராம ராஜ்யம்"**
வாரப் பத்திரிகை
தனிப்பிரதி : 6 ந. பை.
வருட சந்தா : ரூ. 3
65/66, ரட்டன் பஜார், சென்னை-3.


(286)


மலர் 12 ★ **சர்வோதயம்** ★ இதழ் 4

| தொடர் | பொருளடக்கம். | செ. 136 |
|---|---|---|



| | பக்கம் |
|---|---|
| சர்வோதய பக்ஷம் .... | 154 |
| காந்திய நெறியைக் கடைப்பிடியுங்கள்—ராஜேந்திர பிரசாத் | 155 |
| நிலமனைத்தும் கிராமத்தின் பொது உடைமையே —ஜவஹர்லால் நேரு ... | 156 |
| மகாத்மா காந்தி நூல் வெளியீட்டு விழா ... | 158 |
| சர்தார் படேலின் கடிதம் ... | 159 |
| 11-வது அகில இந்திய சர்வோதய மகாநாடு ... | 160 |
| சக்திவாய்ந்த நூல் காணிக்கை—விநோபா ... | 161 |
| தேசப்பிதாவும் அன்னையும் ... | 162 |
| காந்திஜிக்கு அஞ்சலி—நூல் காணிக்கை—ச. ஜெகந்நாதன் | 163 |
| தமிழ்நாடு சர்வோதய மண்டல் .... | 167 |
| தற்கால அசுர சம்பத்துகள் .... | 167 |
| சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் இலக்கிய விற்பனை | 168 |
| சர்வோதய ஊழியர்களுக்கு அறைகூவல் —ஜெயப்பிரகாஷ் நாராயண் .... | 169 |
| ஆட்டையும் வீட்டையும் கொடுத்த கிழவி —ரவிசங்கர் மகராஜ் ... | 172 |
| சர்வோதய பக்ஷம்—க. அருணாசலம் .... | 174 |
| சென்ற பதினோறு அகில இந்திய சர்வோதய சம்மேளனம் | 176 |
| விநோபாஜியின் சௌராஷ்டிர யாத்திரை ... | 177 |
| காந்தியே ஏசுவின் உண்மை சீடர் ... | 180 |
| சர்வோதயத்திற்கு இதயத்தைத் தாருங்கள் —குன்றக்குடி அடிகளார் ... | 181 |
| கிராம ராஜ்யமும் உலக நீதியும் —கோரா. ராமச்சந்திர ராவ். ... | 183 |
| சாம்யயோக சூத்திரம் (3)—ஆச்சார்ய விநோபா ... | 186 |
| சிறையில் மட்டுந்தானா திருடர்கள்—விநோபா .... | 189 |
| டைபிளில் விவசாய சமுதாயம் ... | 190 |
| பூமிதான நில விநியோகம் ... | 196 |
| பூதான - நிர்மாணச் செய்திகள் ... | 199 |

134078

# சர்வோதயம்

## சர்வோதய பக்ஷம்

மகாத்மாவின் அஸ்தி கரைத்த பிப்ரவரி 12உ வரை புனிதமான பட்சமாகும். கீதையில் கூறிய "யக்ஞம், தானம், தபம்" மூன்றையும் பின்பற்றி மனித சமுதாயத்தின் சர்வோதய வாழ்க்கைக்கு நம்மை அர்ப்பணித்துக்கொள்ளும் காலம்.

யக்ஞம் அல்லது வேள்வி சரீர உழைப்பை ஆதாரமாகக் கொண்டது. இங்கு உழைப்பின் சின்னம் ஒவ்வொருவரும் நூற்கும் ஒரு சிட்டம் நூல். இதை சமூக வேள்வியாக, மகாத்மாவிற்கு அஞ்சலியாக மனமுவந்துக் கொடுக்கும் புனித காலம். இதைப் பற்றி பல வேண்டுகோள்களை இதில் காணலாம்.

சமுதாயத்தில் காலப்போக்கில் தாங்கமுடியாத அளவு ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. தனி மனிதனிடத்தில் குவிந்துகிடக்கும் எல்லாவற்றையும் தானாக மனம் உவந்து பங்கிட்டுத் தானம் செய்யும் புண்ணியகாலம் இது.

மானிட சமுதாயத்தைக் காத்துவருவது அறநெறியும் கருணை உணர்ச்சியும். இவைகள் தடுமாறிக்கொண்டிருப்பதை எல்லோரும் அனுபவிக்கிறோம். இதற்கு எல்லோரும் பொறுப்பாவார்கள். நாம் எல்லோரும் ஆத்ம சிந்தனை செய்து வாழ்க்கையில் தவநோக்குடன் கர்மத்தைச்செய்ய சங்கற்பம் செய்துகொள்வோமாக.

மகாத்மா காட்டிய அறவழியாகிய "யக்ஞ—தான—தபம்" வழியைப் பின்பற்றி தனிமனிதனின் பூரண சுதந்திரத்தைக் காத்துப் பூரண உலக அமைதியை நிலைநாட்டக் கருணைக்கடவுள் நமக்கு அருள்புரிவாராக.

"எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

என்ற தாயுமானவர் அருளிய வாக்கே சர்வோதயம். இதைப் போற்றிப் பின்பற்றுவோமாக.

*

# ★ காந்திய நெறியைக் கடைபிடியுங்கள் ★

## ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத்

(காந்திஜி தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய பின் 1917-லிருந்து 1934 வரை பம்பாயிலிருந்தபோது வாழ்ந்த "மணி பவனத்தை" காந்தி நினைவு நிதி ஸ்தாபனத்தார் 1955-ல் விலைக்கு வாங்கி தேசிய ஞாபகார்த்த மாக்கியுள்ளனர். இந்தப் புனித ஸ்தலத்தில் 1959 ஜனவரி 10உ ஒரு நெய் தீபம் ஏற்றி ராஷ்டிரபதி முறைப்படி திறந்துவைத்தார்.

அந்த வீட்டில் காந்திஜி வழக்கமாக அமரும் தாழ்வாரத்திற்கு வந்ததும் ராஜன்பாபுவுக்கு பழைய நினைவுகள் வந்து கண்களில் நீர் மல்கியது. 1932 ஜனவரியில் அந்த இடத்தில் தான் காந்திஜி கைது செய்யப்பட்டார். அங்கு ராஷ்டிரபதி பேசியதின் சாரம் கீழே தரப்படுகிறது.

லோகாயத முன்னேற்றப் போட்டியில் ஈடுபடுவதற்குப்பதில் காந்திஜியின் சீரிய லக்ஷ்யங்களை நிறைவேற்ற மக்கள் தங்களை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும். காந்திஜிக்கு மிகவும் பிடித்தமான மக்கட்பணியில் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் தன்னலமற்ற ஒழுக்க சீலர்களான ஊழியர்களுக்கு இந்த மணிபவனம் ஆதர்ச ஊற்றாகத் திகழட்டும்.

சமுதாயத்தின் ஒரு உறுப்பான தனி மனிதன் சந்தோஷமாயிருந்தாலன்றி சமுதாயம் முன்னேற முடியாது என்று காந்திஜி திடமாக நம்பினார். சாதாரண மனிதன் இன்புற்றிருக்கச் செய்யவே அண்ணல் தம் வாழ்நாள் முழுதும் உழைத்தார். லோகாயத சுபிட்சத்தை ஒரு முடிவாக அவர் கருதவில்லை; மனிதனின் இறுதியான சந்தோஷ—திருப்தி நிலைக்கு ஒரு சாதனமாக வேக்கருதினார்.

சாதாரண மனிதன் சந்தோஷமாக இருக்கவேண்டும், வாழ்க்கைக்கு அவசியமான தேவைகள் அவனுக்குக் கிடைக்கவேண்டுமென்று காந்திஜி விரும்பினார். ஆனால் அவன் திடமனதுடன் ஒழுக்க சீலனாயிருக்கவேண்டும். லோகாயத விஷயங்களுக்கு அடிமையாகி விடக்கூடாது என்றும் அவர் நினைத்தார். மனிதனை வசப்படுத்த முடியா விட்டால், உலகையெல்லாம் வசப்படுத்தித்தான் என்ன பயன்?

காந்திஜி இன்று உயிருடன் இருந்து செயற்கை கிரகங்கள், அணுகுண்டுகள் போன்ற நவீன யுகப் பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தால் என்ன செய்திருப்பார் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் அவர் நிச்சயம் ஒரு பரிகாரம் கண்டிருப்பார். தனி நபர் முன்னேறினாலன்றி சமூகம் முன்னேற முடியாது என்று அவர் நம்பினார்.

# நிலமனைத்தும் கிராமத்தின் பொது உடைமையே

## —பண்டித ஜவஹர்லால் நேரு—

கிராமங்களின் எதிர்கால சுபிட்சமும், நாட்டின் சுபிட்சமும் இம்மாறுதல்களைப் பொறுத்ததாகும். எனவே நாடு இன்றோ, நாளையோ அல்லது மறுதினமோ இம்மாறுதல்களை ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஆகையால் விரைவில் ஏற்பது நல்லது. கூட்டுறவுப் பண்ணைகளைக் கொண்டு வருவதைப் பற்றிக் குறை கூறினார்கள். இது புதிய முறை ஆதலால், இதன் அனுகூலங்களைப் பற்றி விவசாயிகளுக்கு நம்பிக்கை ஊட்டுவது சிறிது சிரமம் தான்.

குடியானவன் தன்னிடமிருந்து நிலம் பறிக்கப்படுவதாக நினைக்கக் கூடும். ஆனால் உண்மை அது அன்று. இம்முறையின் கீழ் குடியானவனுக்குச் சொத்துரிமைகள் தொடர்ந்து இருந்து வரும்; ஆனால் அவரது நிலத்தின் அளவுக்குத் தகுந்தபடி நிகர் கண்டுமுதல் தானியத்திலிருந்து பங்கு கிடைக்கும். நிலம் சொந்தமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் கூட்டுப் பண்ணையில் அவரவர் உழைப்பிற்கேற்ற விதாசாரத்தில் பங்கு கிடைக்கும். அதனால் குடியானவன் நிலத்தை இழந்து விடுவான் என்று கூறுவது தவறு.

கூட்டுறவு சோஷலிச பொதுநல அமைப்பிற்காக நாம் பாடுபடுகிறோம். கிராமத்தில் உணவில்லை என்று யாரும் இருக்கலாகாது. ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும். இத்தகைய கடமையைக் கொண்ட சமூகத்தை அமைப்பது நமது நோக்கம். கூட்டுறவுப் பண்ணை, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஏற்படுத்துவதின் மூலம் ஓரளவு மேற்குறித்த லட்சியம் கைகூடும்; இதன் மூலம் வேலை வாய்ப்பு அமைப்புப் படிப்படியாக மாறும்.

எல்லாம் குடியானவனுக்கு நம்பிக்கை யூட்டும் முறையைப் பொறுத்திருக்கிறது. நிலத்தை யாரும் பறிக்கவில்லை யென்று குடியானவனிடம் நாம் போய் சொல்ல வேண்டும். உணவு தான்ய உற்பத்தியைப் பெருக்கவும், அவர்கள் நிலை மேம்படச் செய்யவும், நிலங்கள் ஒன்றாகத் திரட்டப்படுமென்பதைச் சொல்ல வேண்டும். கண்டு முதலில் பங்குண்டு என்று சொல்ல வேண்டும்.

சிலர் இதில் மாறுதல் கோருகிறார்கள். ஆனால் வேறு விதமாக இப்பிரச்னையைப்பற்றி யோசித்துப்பார்க்க வேண்டும். நிலத்தை நிலமில்லாத் தொழிலாளிகளுக்கு விநியோகிப்பதென்பது வேறு விஷயம். ஆனால் நான் விரும்புவது யாதெனில் கிராம



நிலம் பூராவையும் கூட்டுச்சொத்தாக்கி, கூட்டமாக நிர்வகிக்க வேண்டுமென்பதே.

உபரி நிலங்களை நிலமில்லாதவருக்கும், ஹரிஜனங்களுக்கும் கொடுத்தால் சமூகத்தில் அவர்கள் அந்தஸ்து உயரும் என்றும், அவர்களுக்கு மனத்திருப்தி ஏற்படுமென்றும் சிலர்வாதித்தனர். இதே மக்களுக்கு உபரிநிலங்களை பஞ்சாயத்து மூலம் கொடுக்கும் போது, இவர்களை மட்டுமே மெம்பர்களாகக் கொண்ட கூட்டுறவு சங்கங்களால் நிர்வகிக்கப்படும் போது அவர்கள் அந்தஸ்த்து எப்படிக்குறையுமென்று கேட்கிறேன். அவர்கள் தொடர்ந்து பாத்தியதையை வகித்து வருவார்கள். இந்த அம்சத்தைச் சரிக்கட்ட தீர்மானத்தில் சிலமாறுதல் செய்யலாம். நிலமில்லாத் தொழிலாளிகளை மட்டுமேக்கொண்ட கூட்டுறவுகளின் நிர்வாகத்தில் இருக்கும் வகையில் பஞ்சாயத்துக்களிடம் உபரிநிலங்களை ஒப்படைக்கும் முறை நலம்.

நிலமில்லாதவர்களுக்கு மாற்று வேலை வேண்டுமென்பதற்காக அவர்கள் பெரிய நகரங்களுக்குப் போக வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் கைத்தொழில்களில் ஈடுபடவேண்டும். அவர்கள் நாட்டிற்கு அதிக செல்வத்தைத் தேடித்தரவேண்டும்.

நிலத்தில் அதிகம் விளைவதற்கு "புது விவசாய முறை" வகுக்கப்படவேண்டும். கூட்டுறவுக் கூட்டுப்பண்ணையே புதிய பாணி. இப்புதுவழி முன்னேற்றத்தின் — சுபிட்சத்தின் தலை வாசலைத் திறந்து விடும் பெரிய நடவடிக்கை.

(புது விவசாயப் பாணியைப்பற்றி ஜன 10ல் அபயங்கர் நகர் காங்கிரஸ் மகாசபையில் பேசியதின் சாரம்)

★

## கதர்—கிராமக் கைத்தொழில் ஊழியர்கள் கருத்தரங்கு

கதர்—கிராமக் கைத்தொழில் சேவையில் தமிழ் நாட்டில் அரசாங்கத் துறையிலும், சர்வோதய சங்கம் போன்ற ஸ்தாபனங்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இரு தரத்தாரும் சேர்ந்து சர்வோதய நோக்குடன் வேலை செய்வதைப் பற்றிச் சிந்திக்க ஓர் கருத்தரங்கு ஜனவரி 27, 28, 29 தேதிகளில் திருப்பூர்—வீரபாண்டியில் சர்வோதய சங்கத்தின் வித்யாலயத்தில் நடந்தது. சுமார் முன்னூறு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இத்தகைய உயர்ந்த கருத்தரங்கு தமிழ் நாட்டிற்கு புதியது. இதர ராஜ்யத்திற்கும் வழிகாட்டக் கூடியது. இதன் முழு விபரமும் அடுத்த இதழில் வெளிவரும்.

# மகாத்மா காந்தி நூல் வெளியீட்டு விழா

காந்தியடிகள் அவ்வப்போது எழுதியும், பேசியும் விட்டுச் சென்ற சிந்தனைச் செல்வங்களையும், கருத்துக்களஞ்சியங்களையும் தொகுத்துத் தமிழில் வெளியிட்டுவரும் பணியை காந்தி நினைவு நிதியின் ஆதரவில் காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் செய்து வருகிறது.

ஜனவரி 14 ம்௳ பொங்கல் புது நாளில் இது தனது மூன்றாவது வெளியீட்டு விழாவை இராஜாஜி மண்டபத்தில் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடத்தியது. கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வெளியீட்டு விழாவை நடத்தி வைத்தார்.

கழகத்தின் தலைவர் திரு. T. S. அவிநாசிலிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் "மகாத்மாவின் சுயசரிதை 1920-ல் எழுதப்பட்டது; 1922-ல் முதன் முதலாக வெளியிடப்பட்டது. பின்னர் பல பதிப்புகளும் வெளியாகியுள்ளன. அவரது நூல்களைத் தொகுத்து வெளியிடுகையில், சுயசரிதையை வெளியிடாமல் நம் பணியைப் பூர்த்தி செய்ய முடியாது. முன்னர் வெளிவந்த சுயசரிதைகளில் மகாத்மா எழுதியது மட்டும் தான் உள்ளது; ஆனால் இந்நூலில் அவரது சகோதரிகள், அவருடன் பழகிய மற்றவர்கள் பற்றியெல்லாம் பல்வேறு குறிப்புகளைக் காண்கிறோம். அது மாத்திரமல்ல. 1920-க்குப் பின்னர் அவரது 27 வருட சரித்திரமும், அவருடைய கடைசி நேரத்தின் வரலாறும் இதில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று கூறினார்.

அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் தனது தலைமையுரையில் "காந்தியடிகள் பெற்றுத் தந்த சுதந்திரமே நமக்கு வரப்பிரசாதம். நாம் அதை நன்கு அனுபவித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பினையும் சிறந்த எளிய பாதையையும் அவரே நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறார். அவருடைய நூல்களைவிட அவருக்குச் சிறந்த நினைவுச் சின்னம் வேறு இருக்க முடியாது. காந்தியடிகளை நேராகக் கண்டோம், அவரது மொழிகளைக் கேட்டோம் என்பது மட்டும் போதாது; அவரது எழுத்துக்களைப் படித்து சிந்திக்க வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் நூலை வெளியிட்டு ஆற்றிய உரையில் "தமிழன்னைக்கு மிகவும் சிறந்த மலரொன்றை இன்று படைக்கிறோம். மனிதன் மேலும் மேலும் இன்பத்தை நாடிக் கொண்டிருக்க அதுவோ அகன்று சென்று கொண்டே இருக்கிறது. ஆனால் உண்மையான இன்பம் இன்னதுதான் என்று காண்பதற்கான வழியைக் காட்டக்கூடிய நூல் இது. காந்தியடிகளின் உபதேசங்கள் உலகம் முழுமைக்கும் பொருந்தும்; அல்லலிடையே அகப்பட்டு, மனித குலம் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வேண்டி நிற்கும் இந்த



நெருக்கடியான தருணத்தைக் காட்டிலும் அவரது உபதேசங்களிலிருந்து வழி காண்பதற்கான அதிக அவசியம் வேறு என்றும் இல்லை" என விளக்கினார்.

காந்தி நினைவு நிதிக் காரியதரிசி திரு G. இராமச்சந்திரன் பேசுகையில் பல மொழிகளிலும் வந்துள்ள காந்தியடிகளின் உபதேசங்களையும் நூல்களையும் பயன்படுத்திக் கொண்டு, மூலைமுடுக்குகளில் எல்லாம் அவரின் கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, காந்தி சமாதான ஸ்தாபனம் பற்றிய திட்டத்தையும் எடுத்து விளக்கினார். கூட்டு அபிவிருத்தி கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி நன்றி கூறினார்.

★

## ★ சர்தார் படேலின் கடிதம் ★

"அரசியல் அசுத்தங்களினால் நிறைந்திருக்கிறது. அதில் விழுபவர்களின்மேல் சகதி படிகிறது. அநேகர் அரசியலுக்குப் பெரிய-பெரிய நம்பிக்கைகளோடும், தீவிர ஆசைகளோடும் வருகிறார்கள். அவர்களில் அநேகர் தங்கள் நம்பிக்கைகள் நிறைவேறாது போனவுடன் எரிந்து விழுகிறார்கள்; மற்றவர்களை ஒரு காரணமும் இல்லாமல் நிந்திக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இது சாதாரண விஷயம். ஆனால் பெரிய மனிதர்கள் கூட தங்கள் வரைமுறையை விட்டுவிடுகிறார்கள். அப்பொழுது அரசியலிலிருந்தே விலகிவிட வேண்டும் என்று மனம் விரும்புகிறது.

அரசியலில் ஏமாற்று, சூழ்ச்சி, மோசமான செயல்கள் எல்லாம் சாதாரண விஷயங்கள். ஆனால் காந்திஜி இந்த அசுத்தங்களையெல்லாம் கழுவிக் களைந்து சுத்தமாக்கி அரசியலில் தூய்மையையும், தார்மீக எண்ணங்களையும் இணைத்தார். தன்னைப் பின்பற்றுபவர்களையும் அடக்கத்தோடு இத்துறையில் முடிந்தவரை முயற்சிக்கும்படி கட்டளையிட்டார். சிலர், பயந்து ஓடிவிட்டார்கள். சிலர் அரசியல் சுழலில் சிக்கித் தானே சூழ்ச்சியில் விழுந்துவிட்டார்கள். சிலர் இன்னும் அநேகக் கஷ்டங்களை எதிர்த்து காந்திஜியின் பின்னால் செல்லுவதற்கு பகீரதப் பிரயத்னம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் பலன் என்னாகும்? இது கடவுளுடைய கையில்தான் இருக்கிறது. ஆனால் காந்திஜியின் தபத்தில் இன்னும் நமக்கு நம்பிக்கை இருந்து கொண்டே இருக்கிறது"

சர்தார் படேல் அவ்வப்பொழுது எழுதியக்கடிதங்களையெல்லாம் தொகுத்து நவஜீவன் காரியாலயத்தார் "சர்தார் கி-சீக்" என்று ஹிந்தியில் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் சர்தார் அநேகப் பிரச்னைகளை ஆராய்ந்து இருக்கிறார். கொஞ்சம் ஹிந்தி அறிந்தவர்கள்கூட இதை சுலபமாகப் படிக்கக்கூடும். விலை 80 நயா பைசா.

# 11வது அகில இந்திய சர்வோதய மகாநாடு

முதலாவது சம்மேளனம் 1949-ல் இந்தூர் (ராவ்)-ல் நடந்தது. இப்போது 10 ஆண்டுகள் கழித்து இரண்டாம் முறையாக இவ்வாண்டு சர்வோதயமகாநாடு ராஜஸ்தானில் ஆஜ்மீர் என்ற இடத்தில் நடப்பது விசேஷம்.

நடக்கும் தேதி: பிப்ரவரி 27உ வெள்ளி, பிப்ரவரி 28உ சனி மார்ச் 1உ ஞாயிறு.

சம்மேளனத்திற்கு யாவரும் வரலாம். முந்தைய வருடங்கள்போல் போய்வர இரயில் கட்டணத்தில் பாதி சலுகை உண்டு. இதற்கு சம்மேளன வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியிடம் அத்தாட்சிப் பத்திரம் பெறவேண்டும். இதற்காக ரூ. 3/- செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் ஏதாவதொன்றிற்கு மணியார்டர் மூலம் மூன்று ரூபாய் அனுப்பி அத்தாட்சிப் பத்திரம் பெறலாம்.

1. தமிழ்நாடு சர்வோதய சங்கம், காந்தி நகர், திருப்பூர். 2. நிர்வாகி, த. நா. ச. ச. காதி வஸ்திராலயம், 65/66, ராட்டன் பஜார், சென்னை-3, 3. நிர்வாகி த. நா. ச. ச. காதி வஸ்திராலயம், 7, கீழ ஆவணி மூலவீதி, மதுரை, 4. நிர்வாகி, த. நா. ச. ச. காதி வஸ்திராலயம், நாச்சியார் கோயில் தெரு, உறையூர், திருச்சி.

இந்த அத்தாட்சி பத்திரத்தைக் கொண்டு அந்தந்த வட்டாரத்தின் இரயில்வே D. T. S.க்கு தபாலிலோ, நேரிலோ கொடுத்து இரயில்வே சலுகைக்கு, புறப்படும் ஊர் ஸ்டேஷன் மாஸ்டருக்கு உத்திரவு பெறவேண்டும்.

சம்மேளனத்தில் மூன்று தினங்களுக்கும் சாப்பாட்டிற்காக ரூ. 6-ம் கட்டவேண்டும்.

சென்னையிலிருந்து, பம்பாய் வழியாக அஹமதாபாத் போய் டில்லி போகும் இரயிலில் போகவேண்டும். சென்னையிலிருந்து சுமார் 1500 மைல்கள் தூரமிருக்கும். அல்லது டில்லி போகும் வழியாக போப்பாலிலிருந்து ரட்லம் வழியாகவும் ஆஜ்மீர் போகலாம். சென்னையிலிருந்து இரயில் கட்டணம் சுமார் ரூ. 50/-

இந்த ஆண்டு, பண்டரிபுரத்தில் நடந்ததுபோல் இல்லாமல் எல்லா சர்வோதய ஊழியர்களும் ஒரே இடத்தில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமென்று அறிகிறோம். சம்மேளன சமயத்தில் ஆஜ்மீரில் குளிர் அதிகமாக இருக்கும். 45° க்கு சீதோஷ்ண ஸ்திதி போய்விடுமென்று சொல்லப்படுகிறது. அத்துடன் சிறிது மழையும் பெய்யக்கூடும். ஆதலால் இதற்குப் போதிய கம்பளி உடையும் குடையும் அவசியமாகும்.

# சக்திவாய்ந்த நூல் காணிக்கை

## ஆச்சார்ய வினோபா

நூல் காணிக்கை மிகவும் சக்திவாய்ந்தது. அந்த சக்தியை நாம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. காந்திஜியின் நிலையில் உடலுழைப்பிற்கு மதிப்பளிப்பதற்கும், நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் பொறுப்பை நாம் உணர்ந்திருக்கிறோம் என்பதைப் புலப்படுத்தவும் நூல் காணிக்கை செலுத்த வேண்டும். நான் இதை சர்வோதயத்திற்கு அளிக்கப்படும் ஓட்டென்று மதிக்கிறேன்.

இதற்காக நாம் கிராமம் கிராமமாகச் செல்ல வேண்டியிருக்கும் என்பதே இதிலுள்ள கஷ்டம். ஆனால் நான் இதைக் கஷ்டமாகக் கருதாது, இந்த நிமித்தமாகவாவது கிராமம், கிராமமாகவும், வீடுவீடாகவும் போவதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருப்பதால் இதை நமக்கு உற்சாக மூட்டக்கூடியதாகவே கருதுவேன்.

இருபத்தைந்து லக்ஷம் ஏக்கர் நிலம் பெறுவதென்று உறுதி செய்து கொண்டிருந்ததைப்போல லக்ஷக்கணக்கான சிட்டங்கள் நாம் சேர்க்கமுடியும், உழைப்பின் மதிப்பை வளர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படும். இதைத்தவிர இன்னொரு விஷயமும் நாம் இதிலிருந்து விரும்புகிறோம். அதாவது இது வரையில் நாம் நடத்திய எல்லா ஸ்தாபனங்களையும் பணத்தைக் கொண்டே, பணஅடிப்படையிலேயே நடத்திவந்தோம். அதாவது பணம் படைத்த நம் நண்பர்கள், நம்மிடம் அன்புள்ளவர்கள், அனுதாபம் உள்ளவர்கள் இருக்கிறார்களே, அந்தத் தூய உள்ளம் படைத்தவர்கள் மனமுவந்து கொடுக்கும் பணத்தை நாம் ஏற்றுவந்தோம். ஆனால் இப்பொழுது காலம் மாறிப் போய்விட்டது. இப்பொழுது உழைப்பின் யுகம் உதயமாகி விட்டது. ஆகையால் உழைப்பின் மதிப்பை நாம் வளர்க்கவேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உழைப்பையே அடிப்படையாகக் கொண்டு, உழைப்பல்லது வேறு எதையும் பெறாது இயங்கும் ஒரு ஸ்தாபனமாவது அமைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இந்த நூல்காணிக்கையின் விஷயம் பரவுமானால் இத்தகைய ஸ்தாபனங்களை நம்மால் நடத்த முடியும். அதன் மூலமாக உண்மையான ஒளிபெற்ற ஊழியர்கள் தோன்றுவார்கள். அவர்கள் வேலையை வளர்ப்பதோடு சிறந்த பிரசாரமும் செய்ய உதவுவார்கள். இது நம்மிடமுள்ள மற்றொரு திட்டம்.

நாம் செய்யும் வேலை மதம் அல்லது சமயப்பணி அல்ல. சர்வோதயக்காரர்கள் என்ற சொல்லை எவரும் சொல்லலாகாது. மனித சமூகத்தைச்சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர நமக்கு வேறு அடைமொழி எதுவும் கிடையாது. சர்வோதய சமாஜத்தைக் கட்டு திட்ட முற்ற ஒரு ஸ்தாபனமென்று தாம் கருத

வில்லை. ஆயினும் அது ஒரு மத—சமய கோஷ்டியாகி தவறான முறையில் போய்விடக்கூடும். ஆகையால் குறிப்பிட்ட ஒருவர் காங்கிரஸ்காரர், இன்னொருவர் சோஷலிஸ்ட் என்பது போன்ற வகையில் நாம் பேசவே கூடாது.

ஆனால் நமக்குக் கட்சி எதுவும் இல்லை; மூன்றாவது சக்தி என்கிறார்களே அதுவே தான் நாம். அதாவது இன்றைய உலகப்பேச்சு வழக்கில் எவர்கள் அமெரிக்க கோஷ்டியிலும் சேராமல், ருஷ்ய கோஷ்டியிலும் சேராமலிருக்கிறார்களோ அவர்களே மூன்றாவது சக்தி என்று சொல்லப்படுகிறார்கள். ஆனால் நான் மூன்றாவது சக்தி என்று குறிப்பிடுவது வேறு.

முதல் சக்தி "ஹிம்சை சக்தி" இரண்டாவது "தண்டசக்தி" மூன்றாவது சக்தி ஹிம்சை சக்தி'க் கெதிரானது. ஆகவே அது ஹிம்சை சக்தியல்ல. அது தண்ட சக்தியிலிருந்து வேறுபட்டதாகையால் அது தண்ட சக்தியும் அல்ல அதற்கே மூன்றாம் சக்தி என்று பெயர். நாம் அந்தச் சக்தியை எங்கும் பரப்ப விரும்புவதால் நாம் அதை ஒரு சமயக் குழுவாக்க விரும்பவில்லை. நாம் சர்வோதயக்காரர்களென்று தனித்திருக்க விரும்பவில்லை. பொது மக்களுடன் இரண்டறக் கலந்து மனிதர்களாக வாழ விரும்புகிறோம்.

(சாண்டில்—சர்வோதய மகாநாட்டில் பேசியது)

## தேசப்பிதாவும் அன்னையும்



தேசப்பிதாவிற்கு சர்வோதய மேளாவில் அஞ்சலி செலுத்தும் மாதத்திலேதான், 1942 பிப்ரவரி 22உ அன்னை கஸ்தூரிபா காந்தி ஆகாகான் மாளிகையில் பரமனது திருவடிகளை அடைந்தார். மகாத்மாவுடன் உறுதுணையாக நின்ற மாதர்குல மாணிக்கம், பாரத மக்களின் அன்னை கஸ்தூர்பாவிற்கு நமது அஞ்சலி.

# காந்திஜிக்கு அஞ்சலி — நூல் காணிக்கை

ச. ஜெகந்நாதன்

உடல் உழைப்பிற்கு மதிப்புக் கொடுத்து உழைப்பையே உயரிய செல்வமாகக் கருதி உழைப்பாளிகளைக் கௌரவித்த நாடுகள் தான் உலகில் வேகமாக முன்னேறி வருகின்றன. மூளை உழைப்பிற்கும், உடல் உழைப்பிற்கும் வேறுபாடே கருதாது இரண்டையும் சமத்துவக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் நாடுகள் தான் இன்று தலை நிமிர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். உடல் உழைப்பைப் போற்றுகின்ற நாடுகளில் விஞ்ஞான சக்திகளும் இணைந்து கொண்டால் சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஏனெனில் இந்த நாடுகளில் உழைப்பே பிரதானச் செல்வம். ஆனால் நம் நாட்டில் உழைப்பை உதாசீனம் செய்கின்ற, தாழ்வாகக் கருதுகின்ற மனப்பான்மை இன்னும் நீடித்துக்கொண்டு வருகிறது. அம்மனப்பான்மையினால்தான் இந்தியா அடிமைத்தனத்தில் சிக்கி உழன்றது.

சுதந்திரம் பெற்று பத்து ஆண்டு காலத்திற்கு மேலாகியும் நாடு உருப்படியான முன்னேற்றம் காணாததற்கு பிரதான காரணம் உழைப்பிற்கு மதிப்புக் கொடுக்காதிருக்கின்ற மனப்போக்குத்தான். இங்கு உற்பத்தி செய்கின்ற, வளத்தைப் பெருக்குகின்ற உழைப்பாளிகள், விவசாயிகள், தொழிலாளிகள் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள்; நடத்தப்படுகிறார்கள். ஆனால் பணத்திற்கும், பயன்படாத இன்றைய கல்விக்கும், பதவிக்கும், பட்டத்திற்கும் கௌரவம் அளிக்கப்படுகிறது. இந்த நிலைமை நீடித்திருக்கும் வரை நாடு முன்னேறுவது என்பது நடவாத காரியம். வேகமாக முன்னேறி வரும் உலக நாடுகளுடன் பாரத நாடும் ஒன்றாக வேண்டுமென்றால் நாற்பதுகோடி மக்களின் உழைப்பு சக்தி கட்டவிழ்த்து விடப்பட வேண்டும். உழைப்பாளிகளை தெய்வமாகப் போற்ற வேண்டும்.

அண்ணல் காந்தியடிகள் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே உழைப்பிற்கு மதிப்பளிக்கவேண்டுமென்று போதித்து வந்தார். தாமே ஒரு உழைப்பாளியாக, உழைப்போருக்கு உதாரண புருஷராக விளங்கினார். உழைப்பின் சின்னமாக தினந்தோறும் நூற்பதைத் தமது அன்றாட வேலைத் திட்டத்தில் இணைத்துக்கொண்டிருந்தார். சிறையிலிருக்கும் பொழுதும் ராட்டையைச் சுழற்றுவதை அவர் நிறுத்தவில்லை. வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுதும் ராட்டையுடன் சென்றார். இங்கிலாந்தில் "ஆசியாவின் குரலைக்" கேட்க மாபெரும் பல கூட்டங்கள், நிகழ்ச்சிகள்! ஒரு நாள் பகலில் நூற்பதற்குச் சமயம் கிடைக்கவில்லை. இரவு இரண்டு மணிவரையிலும் பல நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டு காந்திஜி இருப்பிடம் திரும்பினார். ஆயினும் தன்னை உழைப்

பாளிகளோடு பிணைக்கும் ராட்டையை மறந்தாரா! அது அவருக்கு அஹிம்சையின் சின்னமல்லவா? இரவு இரண்டு மணிக்குமேல் தன் நூற்பு வேள்வியை முடித்து விட்டுத்தான் உறங்கச் சென்றார். வழக்கம்போல் மறுநாள் நான்கு மணிக்கே எழுந்து அந்த அற்புத மனிதரின் யந்திரம் இயங்க ஆரம்பித்து விட்டது. காந்தியடிகள் தமது வாழ்வின் இறுதி நாளில், கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்வதற்கு முன்னால் ராட்டையைச் சுழற்றிக் கொண்டிருந்தார். அந்தத் தியாகமூர்த்தியின் கடைசிச் செயல் அவருக்குப் பிரியமான நூற்பாகவே இருந்தது. இங்ஙனம் காந்தியடிகள் வாழ்நாள் முழுவதும் உழைப்பை மதித்து உழைப்பாளிகளுக்காகவே பாடுபட்டார்.

வினோபாஜி அவர்கள் ஆசிரமத்திலிருந்தபோது ஓர் உழவராகவே வாழ்ந்தார் என்று கூறினால் மிகையாகாது. உழைப்பின் மூலமே தேவையைப் பூர்த்திசெய்து கொண்டார். சிலகாலம் நூற்றே அதன் மூலம் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டார். பூமிதான இயக்கம் தொடங்கிய பின்னர் தினம் தினம் நடக்கிறாரல்லவா? இந்த மகா யக்ஞத்தில் பாபாவின் முதல் வேலை நூற்புத்தான். பாபா அவர்கள் இன்றும் அதிகாலைமூன்று மணிக்கே விழித்தவுடன் முதலில் நூற்பதைப் பார்க்கிறோம். கதிரவன் உதிக்க மறந்தாலும் பாபா கைராட்டையைச் சுழற்றுவதை நிறுத்த மாட்டாரோ? இல்லையெனில் "தூய கதராடையில் மண்களை படியட்டும்" என்று கூறுவாரா? "அமைச்சராயிருந்தாலும், ஜனாதிபதியாயிருந்தாலும் மண்வெட்டி பிடித்து வேலை செய்ய வேண்டும்" என்று கூறுவாரா? நாம் காண விரும்பும் சர்வோதய சமுதாயம் உழைப்பை அடிப்படையாகக் கொண்டு தான் உருவாகும் என்று கூறும்பொழுது நாம் தானே பிறருக்கு முன்மாதிரியாக யிருக்கவேண்டும்.

அண்ணல் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்த காந்தியடிகளின் நினைவாக ஜனவரி, 30-ம் தேதியிலிருந்து பிப்ரவரி 12ம்தேதி வரை சர்வோதய பட்சம் கொண்டாட விருக்கிறோம். அண்ணல் காந்தியடிகளுக்கு நாம் எங்ஙனம் அஞ்சலி செலுத்துவது? உழைப்பை உயர்வாகக் கருதிய காந்திஜிக்கு நாம் உழைப்பின் மூலமே அஞ்சலி செலுத்த வேண்டும். அவர் சுழற்றிய ராட்டையில், சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் கையாண்ட ஆயுதத்தில், ஓய்வு ஒழிவில்லாது போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவர் தமக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்ட உழைப்புக் கருவியில் நூற்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிட்டம் "நூல் காணிக்கை" அளிக்க வேண்டும். அக்காணிக்கை தான் காந்தியடிகளுக்குப் பிரியமானதாக இருக்க முடியும். அதன்மூலம் தான் அவருக்கு நாம் உண்மையான அஞ்சலி செலுத்தமுடியும். காந்திஜி நம்முடனிருந்தபோது ராட்டை சுதந்திர கீதம்பாடியது; அஹிம்சை



சின்னத்தின் தர்மச் சக்கரமாகச் சுழன்றது. மேலும் இப்போது, அரசியல் சுதந்திரத்திற்கும் பிறகு சர்வோதய லட்சியத்தைப் போதிக்கிறது. கதர் சுதந்திரத்தின் அணிகலனாக இருந்தது அக்காலத்தில். இப்போது சர்வோதயத்தின் சின்னமாகத் திகழ்கிறது. ராட்டைப் புரட்சியுடன், பூமிதானப் புரட்சியும் இணைந்து கொண்டதால் சர்வோதய தரிசனமும் நாளுக்கு நாள் தெளிவாகி வருகிறது. இனி சர்வோதய தரிசனம் உலக மக்களுக்கெல்லாம் உயரிய லட்சியம் ஆகும். சர்வோதயத்தை மக்கள் உணர்ந்து ஆதரவளிப்பதற்கும் சின்னம் நூல் காணிக்கையே! சர்வோதயத்திற்கு மக்களின் சம்மதம் நூல் காணிக்கை. சர்வோதயத்தை உருவாக்கிய காந்திஜிக்கு நாம் அஞ்சலி செய்வதற்கு நூல் காணிக்கைதான் ஏற்றது.

தமிழகத்தில் நாளுக்கு நாள் நூற்போர் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது. எனவே தமிழகம் முழுமையுமிருந்தும் நூல் காணிக்கை மலைபோல் குவிய வேண்டும், அண்ணல் காந்தியடிகளுக்கு இங்ஙனம் காணிக்கை செலுத்த எத்தனையோ மக்கள் பேரார்வத்துடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் "நூல் காணிக்கை" செய்தி, அதில் பொதிந்துள்ள ஆழமான கருத்து எட்டியாக வேண்டும். அங்ஙனம் செய்தியும், கருத்தும் பரவி விடுமாயின் மக்கள் மனமுவந்து தருகின்ற காணிக்கையைப் பெற்றுக் கொள்ள இரண்டு கைகள்போதாது. இதற்கு காந்திய நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் காந்தியத்தில் நம்பிக்கை கொண்டிருப்போர், காந்தியடிகளின் மீது தூய்மையான அன்பு செலுத்துவோர் அனைவரும் தயாராக வேண்டும். இப்புனிதப் பணியில் ஈடுபட எண்ணற்ற ஊழியர்கள் படை திரள வேண்டும். அலை அலையென ஊழியர்கள் திரண்டால் மலை மலையென காணிக்கைக் குவியும். அங்ஙனம் குவிய வேண்டுமென்றுதான் வினோபாஜி அவர்கள் விரும்புகிறார்கள். இது வினோபாஜி தன் குருநாதன் காந்திஜியின் நினைவிற்கு வகுத்த அருமையான நூல் காணிக்கைத் திட்டம்.

கடந்த ஆண்டு தமிழ் மக்கள் 50,000 சிட்டங்களை காணிக்கையாக அளித்தார்கள். மூன்று கோடித் தமிழ் மக்கள் ஐம்பதினாயிரம் சிட்டங்கள் தானா அளிப்பது? ஆதலின் இவ்வாண்டு, சென்ற ஆண்டின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருக வேண்டும். இவ்வாண்டு அகில இந்தியாவிற்கும் 16 லட்சம் சிட்டம் நூல் காணிக்கை அர்ப்பணிப்பதென சர்வ சேவா சங்கம் முடிவு செய்திருக்கிறது. இதில் தமிழ்நாட்டின் பங்கு ஒன்றரை லட்சம் சிட்டங்கள். நாம் போன ஆண்டைக்காட்டிலும் மும்மடங்கு சிட்டங்கள் அர்ப்பணிக்க முன்வர வேண்டும். முயன்றால் இது முடியாததல்ல. நிர்மாணப் பணி புரியும் ஸ்தாபனங்கள் ஆதாரக் கல்விச் சாலைகள், சமுதாய நலத்திட்ட இலாக்காவினர், சர்க்கார் கதர் இலாக்காவினர் அனைவரும் ஒன்றுபட்டு வேலை செய்தால் ஒன்றரை லட்சம் சிட்டம் நூல் காணிக்

கைத் திட்டத்தை இவ்வாண்டிற்கு நிறைவேற்றி விடலாம். தமிழ்நாடு சர்வோதய சங்கத்திலிருந்து நூல் காணிக்கைப் பிரச்சாரத்திற்கு வேண்டிய நோட்டீசுகள், சுவரொட்டிகள் பிரசுரங்கள், ரசீதுப் புத்தகங்கள் வேண்டுவோருக்கு வழங்குவார்கள். ஆங்காங்குள்ள கதர் வஸ்திராலயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நாம் அளிக்கின்ற காணிக்கை சர்வோதய இயக்கப் பணிகளுக்குப் பயன்படுகிறது, என்பதை அறிவீர்கள். பூமிதான, கிராமதான இயக்கம் இனிமேல் நூல் காணிக்கையின் மூலமே நடைபெறவேண்டுமென்று வினோபாஜி கூறுகிறார்கள். காந்திய நிர்மாணப் பணிகள் வெற்றியடைவதற்கும், பொருளாதாரப் புரட்சி வெற்றிபெறவும், காந்தியடிகள் காண விரும்பிய "கிராம ராஜ்யம்" உருவாகவும் நாம் அளிக்கின்ற நூல் காணிக்கை பயன்படுகிறது. உதவி சிறிது தான்! எனினும் அதில் பொதிந்துள்ள கருத்து ஆழமானது ஆழம் காண முடியாத ஆழமானது. ஆதலின் நாம் நூல் காணிக்கை செலுத்துவதின் மூலம் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்துவோம். நூல் காணிக்கையின் ஒவ்வொரு இழையிலும் உழைப்பை உயரிய செல்வமாகக் கருதும் பாவனையும், சர்வோதய லட்சியத்திற்கு நம்மை அர்ப்பணிக்கும் இருதய சுத்தியும், பொதிந்திருக்கட்டும். கிருஷ்ண பகவானுக்கு குசேலர் அர்ப்பணித்தது வெறும் அவல்தான். ஆனால் ஒவ்வொரு அணுக்கிலும் அத்தனை பக்திப் பாவம் ததும்பியிருந்ததால், பகவானுக்கு மிகப்பிரியமானதாகி விட்டது. நாம் அர்ப்பணிக்கும் சிட்டம் வெறும் நூல் அவல்—அது உழைப்பு தெய்வத்திற்கு, சர்வோதய லட்சியத்திற்கு அளிக்கும் காணிக்கை!

★

## சர்வோதய எழுத்தாளர்களுக்கு

1. சர்வோதயம் ஊழியர்களுக்கு வினோபாஜி, ஸ்ரீஜெயப்பிரகாஷ் போன்றவர்களுடைய ஆதாரக் கருத்துக்களுக்கும், அதன் விளக்கங்களுக்கும் சர்வோதயம் முக்கியத்துவம் அளிக்கிறது.

2. பூதான — கிராமதான் புரட்சி செய்திகளுக்கும் அதன் வேலைத்திட்டங்களுக்கும் இதில் முதல் இடம் தரப்படுகிறது.

3. ஆங்காங்கே நடக்கப்போகும் திட்டங்களை விட நடைபெற்ற வேலைகளையும், விசேஷ சம்பவங்களையும் சர்வோதயம் வரவேற்கிறது.

4. எழுத்தாளர்கள் சர்வோதயத்தில் வெளி வந்தக் கருத்துக்களையே மீண்டும் இங்கு எழுதி அனுப்புவதைக் காட்டிலும் வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பி பிரசுரிக்கச்செய்தால் இயக்கத்திற்கு பிரசாரம் செய்தவர்களாவார்கள்.

5. சர்வோதயக்கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய இலக்கிய ஆதாரங்களும், ஒரே பக்கத்திற்குள் அடங்கக்கூடிய சிறு கதைகளும் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. எழுத்தாளர்கள் கதை, கட்டுரைகள் அனுப்பும்பொழுது தங்களிடம் ஒரு பிரதி வைத்துக்கொள்ளவேண்டும். அவைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

7. பிரசாரத்திற்கு தகுந்தவை பிரசுரிக்கப்படும். அது சம்பந்தமாக எந்த விதமான கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

—ஆசிரியர், சர்வோதயம்.

# தமிழ்நாடு சர்வோதய மண்டல்

தமிழ்நாடு சர்வோதய மண்டலின் 12வது கூட்டம் 26-12-58ல் வத்தலகுண்டில் நடந்தது. அங்கத்தினர்களில் பத்து நபர் வந்திருந்தனர். விசேஷ அழைப்பின் பேரில் மூன்று அன்பர்கள் கலந்துகொண்டனர். கீழ்க்கண்ட விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

1. சென்னைநகர் சர்வோதய சம்மேளனத்தையும், மதுரை இராமநாதபுரம் ஜில்லா சம்மேளனத்தையும் (முதுகுளத்தூரில்) திரு. ஜெயப்ரகாஷ் தமிழ்நாட்டிற்கு வரும்போது நடத்துவது. இதேசமயம் கிராமதானக் கலைவிழாவையும் நடத்தலாம். பல ஜில்லாக்கள் சேர்ந்து நான்கு முக்கியமான இடங்களில் சமீபத்தில் சர்வோதய சம்மேளனங்கள் நடைபெற்றன. இந்த அனுபவத்தைக் கொண்டு இனி ஒவ்வொரு ஜில்லாவிலும் தனித்தனி சம்மேளனங்கள் நடத்துவது நலம் என்று முடிவு செய்யப்பட்டது.

2. ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு ஊழியராவது இருந்து முழுநேர வேலை செய்ய வேண்டும். அந்த தாலூகாவிலேயே அவருக்கு உதவியாக சம்பத்துதானம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

3. சென்னை மாநில பூமிதான சட்டத்தைப் பற்றிய அரசாங்கம் தயாரிக்கும் விதி முறைகளைப்பற்றி அடுத்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

4. சர்வோதய மண்டலின் முதல் இரண்டாண்டு வேலை அறிக்கை வெளியிடப்படும்.

5. ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 1000 சர்வோதயப் பாத்திரங்களாவது வினியோகிக்கப் படவேண்டும்.

6. தமிழ் நாட்டில் சாந்திசேனை சம்பந்தமான வேலையை திரு ரெ. தெ. ப. சுப்பிரமணியம் கவனித்து அவ்வப்பொழுது வினோபாஜிக்கு அறிவித்து வருவார்.

7. நூல்காணிக்கை சம்பந்தமாக ஒன்றரை லக்ஷம் சிட்ட லக்ஷிய அளவை, அரசாங்கக் கதர் ஊழியர்களும் எல்லா நிர்மாண ஊழியர்களும் சேர்ந்து பூர்த்தி செய்து விடவேண்டும்.

## ★ தற்கால அசுர சம்பத்துகள் ★

என் கலாசாரம் அழகியது, சிறந்தது என்று எண்ணும் மனப்பான்மை போன்றதே, 'உலகத்தின் செல்வம் அனைத்தையும் வைத்திருக்கத் தகுதியுள்ளவன் நானே' என்று எண்ணும் மனப்போக்கும்.

உலகத்தின் செல்வமெல்லாம் எனக்கு வேண்டும்; நான் அதைப் பெற்றே தீருவேன். இந்தச் செல்வத்தை நான் எதற்காகப் பெறுவது என்று கேட்டால், இதை எல்லோருக்கும் சமமாகப் பங்கிடுவதற்காக என்பார்கள். இதன்பொருட்டு நான் முதலில் என்னைச் செல்வத்துள் ஆழ்த்திக் கொள்ளுகிறேன்.

அதற்காக எனக்கு அதிகாரம் வேண்டும். அதிகாரமனைத்தும் ஒருவர் கையிலேயே குவிந்திருக்க வேண்டும். சுதந்திரமே—என் ஆணை; அதன்படி எல்லாம் இயங்கவேண்டும். எனக்கடங்கி, என் ஆட்சிக்குட்பட்டு நடப்பதே சுதந்திரம்.

இவ்வாறு கலாசாரம், ஆதிபத்தியம், செல்வம் என்ற இம்மூன்று முக்கிய விஷயங்கள் அசுர சம்பத்தில் வற்புறுத்தப்படுகின்றன.

"கீதைப்பேருரைகள்"

# சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில்

## சர்வோதய இலக்கிய பட்சத்தில் இலக்கிய விற்பனை

| பிளாக்குகள் | இலக்கிய விற்பனை ரூ. ந.பை | பிளாக்குகள் | இலக்கிய விற்பனை ரூ. ந.பை |
|---|---|---|---|
| கும்பகோணம் | 30–00 | மேச்சேரி | 21–59 |
| சிவகாசி | 10–65 | தேவக்கோட்டை | 45–68 |
| காவேரிப்பட்டணம் | 99–98 | கள்ளக்குறிச்சி | 33–00 |
| குன்னூர் | 72–82 | வேப்பந்தட்டை | 84–48 |
| திருவாடானை | 92–05 | ராதாபுரம் | 99–98 |
| போளூர் | 92–51 | கமுதி | 49–73 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 49–50 | ஆற்காடு | 63–12 |
| மீஞ்சூர் | 5–80 | ஈரோடு | 99–98 |
| சின்ன சேலம் | 93–96 | அம்மாபேட்டை | 48–75 |
| சேத்துப்பேட் | 99–98 | கே. பரமத்தி | 99–98 |
| திருத்துறைப்பூண்டி | 88–00 | தஞ்சாவூர் | 31–62 |
| சத்தியமங்கலம் | 85–99 | கே. வி. குப்பம் | 78–73 |
| மேல்மலையனூர் | 99–98 | திண்டுக்கல் | 24–79 |
| சேரன்மாதேவி | 94–53 | அம்பாசமுத்திரம் (ஊர்காடு) | 98–73 |
| பெரம்பலூர் 2 | 64–16 | கல்லல் | 53–45 |
| செஞ்சி | 78–84 | தொட்டியம் | 18–51 |
| போடிநாயக்கனூர் | 98–99 | பெரம்பலூர் (1) | 11–10 |
| உளுந்தூர்பேட்டை | 34–29 | கூனூர் | 72–82 |
| பாபநாசம் | 49–81 | T. கல்லுபட்டி | 15–09 |
| பழனி | 51–65 | கருங்குளம் | 99–98 |
| வேம்பாக்கம் | 60–82 | ராஜக்கமங்கலம் | 99–98 |
| கோவில்பட்டி | 79–47 | ஆரணி | 72–39 |
| துரிஞ்சியாபுரம் | 48–95 | காங்கேயம் | 7–56 |
| மேலூர் | 37–31 | பவானி | 49–89 |
| குத்தாலம் | 99–73 | மொத்தம் | 3,378–15 |
| கலசபாக்கம் | 99–73 | முன் டிசம்பர் இதழ்படி | 2,912–28 |
| அவிநாசி | 99–53 | ஆக மொத்தம் ரூ. | 6,290–43 |
| திருவிடமருதூர் | 60–34 | | |
| முசிரி | 40–34 | | |
| நாகப்பட்டினம் | 88–69 | | |
| பெரியநாயக்கன்பாளையம் | 13–30 | | |
| ஆவுடையார்கோவில் | 75–52 | | |

பாக்கி பிளாக்குகளிலிருந்து அறிக்கையும், விற்ற பணமும் வந்து சேரவில்லை.

★

# சர்வோதய ஊழியர்களுக்கு அறைகூவல்

ஜெயப்ரகாஷ் நாராயண்

நாடு முழுதிலும் மிகச்சிலராகும் நாம் சேர்ந்து ஒரு புரட்சியை தோற்றுவிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளோம். இவ்வேலை பெரியதென்பதில் சந்தேகமேயில்லை. நம் போன்ற வலுவற்ற சிலர் ஏற்றுக்கொண்டுள்ள பாரம் மிகவும் கனமானது. இன்று நாட்டின் பெரிய தலைவர்கள் ஆட்சியமைப்பில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எஞ்சியுள்ள சிலராகும் நாம் காந்தியடிகளின் புது சமுதாயத்தை நிறுவும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாட்சி மூலம் எங்கும் என்றும் சமுதாயப் பொருளாதாரப் புரட்சியை உண்டாக்க முடியாது என்ற திட நம்பிக்கை கொண்டவன் நான். மக்கள் புரட்சிக்குத் தயாராக இல்லாவிட்டால், அரசாங்கம் மேலுள்ள விவகாரத்தை மட்டும் தான் கொண்டு செலுத்த முடியும். ஆகையால் நான் எப்பொழுதும் நாட்டின் பெருந் தலைவர்கள் மக்களிடம் வந்து சமுதாய பொருளாதார புரட்சிக்கு அநுகூல நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கொள்கின்றேன்.

இன்று உலகெங்கும் விசித்திர நிலையுள்ளது. உலகின் ஒரு பெரும் பகுதியை சமீபத்தில் பார்த்து வந்ததிலிருந்து மனித சமுதாயத்தைக் கவர்ந்துள்ள இந்த இயந்திர மோகம் என்று எவ்வெல்லையில் போய் நிற்குமென்று ஆழ்ந்து சிந்திக்கின்றேன். சமுதாய வாதமும் கம்யூனிஸமும் சில எல்லைகளில் புரட்சியை உண்டாக்கின. ஆயின் அப்புரட்சிகளுக்குப் பின்பும் அந்த மக்களின் தலைவர்கள், புரட்சி வீரர்கள் தாங்கள் செய்த புரட்சி சரியாக நற்பயனை விளைவிக்கவில்லை என்று உணர்கின்றார்கள். இதுதான் உலக நிலை, நாமும் அந்நிலையிலமர்கின்றோம்.

பூதான இயக்கம் தோன்றி எட்டு வருஷங்களாயின. அடிகள் இருளில் திகைத்திருந்த நமக்கு ஒளியை வழங்கியுள்ளார். காந்தியடிகளுக்குப் பிறகு அடிகள் இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்காவிட்டால் நாம் ஓய்ந்து போயிருப்போம். இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது போதாது. இளைஞராகும் நாம் இயக்கத்தை எப்படி ஏற்றுள்ளோம் அதை எவ்வளவு பயனுள்ளதாக்கியுள்ளோம் என்பது கேள்வி. இவ்வெட்டு வருஷங்களில் எவ்வளவு நடைபெற்றிருக்க வேண்டுமோ அவ்வளவு வேலை நிச்சயமாக நடைபெறவில்லை. சிந்தனையைத் தெளிவாக்கியும் அவ்வழியில் மக்களை ஏன் இழுத்துச் செல்ல முடியவில்லை என்பதை ஆராய வேண்டும். விநோபா வடிகள் கொடுத்த சிந்தனையை தேசம் ஏற்றுக் கொண்டுவிட்டது. அதை எதிர்ப்போர் யாருமில்லை. மக்களால் மதிக்கப்படும் இந்த இயக்கம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட

வில்லை. காந்தியடிகளின் சிந்தனையை மிக உயர்ந்ததாக மக்கள் கொள்ளலாம், அதனால் மக்கள் சர்வோதய கொள்கைகளை எளிதிலும் சீக்கிரத்திலும் புரிந்து கொள்ளாமலிருக்கலாம். அடிகளின் வேதாந்தம் நிறைந்த போதங்கள் உலக அநுபவத்திற்கு சாத்தியமற்றது எனச் சிலர் கொள்வதாகவும் இருக்கலாம். 'இவ்வேலையை செய்து முடிப்பேன் முயற்சியில் மாண்டு படுவேன்' என்ற விரதத்துடன் நாம் இவ்வேலையை ஏலாததே காரணம், என்பது என் துணிவு. நாமோ மிகச்சிலர் வலிவற்றவர்கள். ஆயின் நம் சிந்தனை வலிவற்ற நமக்கும் வலிவு கொடுக்கும் பலம்பெற்ற சிந்தனை. ஆகையால் இயக்கத்தில் ஈடுபடும் சகாக்களை இப்புரட்சியை உண்டாக்குவதே தங்கள் வாழ்க்கை இலட்சியம் என்று கொள்ள வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இதைச் சொல்லுவது எளிது, பல தடங்கல்கள் உள்ளன, ஆனால் தடைகளில்லாத எளியவழியேது? தடைகளை விலக்கியும் நாம் முன்னேற வேண்டும். சுதந்திரப் போராட்ட காலத்தில் நம் துணைவர்கள் பட்டினியால் வாடியும் போலீஸ்காரர்களுக்கு தடியால் அடிக்க தம் தலையை முன் நீட்டினார்கள். அதே இரத்தம் இன்றும் உள்ளது, வலிவும் உள்ளது என்பது என் நம்பிக்கை. இந்த நம்பிக்கையுடனேயே நான் இளைஞர்களை வரிந்து கட்டிக்கொண்டு இந்த அஹிம்ஸா புரட்சியை வெற்றிகரமாக முடித்து வைக்க முன்வரக் கோருகின்றேன்.

இன்று பூர்ண சுயராஜ்யம் பெற்றுவிட்டதாக நீங்கள் கொள்ளாதீர்கள். நம் போராட்டம் முடிந்துவிடவில்லை. "ஹோம்ரூல்" என்ற நூலில் காந்தியடிகள் குறித்துள்ள சுயராஜ்யம் நமக்குக் கிட்டிவிடவில்லை. சுதந்திரப் போராட்ட வீரர்கள்கூட இப்பொழுது யுத்தம் தீர்ந்துவிட்டதாக ஓய்வெடுக்காமல் இப்புரட்சியை உண்டாக்கும் போரில் இறங்க நான் அவர்களை அழைக்கின்றேன்.

பூதான கிராமதான வேலைகளை நாம் மிகவும் பணிவுடன் செய்ய வேண்டும். கிராம மக்களுக்குப் பெரும் வாதங்களை நாம் புகட்ட வேண்டாம். அவர்களுக்கு பற்பல ஆசைகளையும் உண்டாக்கக் கூடாது. கிராம நிர்மாண வேலை அரசாங்கத்தாலும் ஆகக் கூடுவதன்று, எந்த கட்சியாலும் ஆகக்கூடியதன்று, சர்வோதய வாதிகளாலும் ஆவதன்று. கிராம மக்கள் விழிப்பு பெற்று அவர்களே செய்து கொள்ள வேண்டிய வேலையது. நாம் மக்களுக்கு விழிப்பு கொடுத்தால் போதும். கிராம நிர்மாண வேலையில் நாம் அக்கறை கொள்ளக் கூடாதென்றும், அவர்களுக்கு வழிகாட்டக் கூடாதென்றும் நான் சொல்ல வரவில்லை. அதை நாம் செய்தாக வேண்டும். அது நம் பொறுப்புதான். ஆயின் நிர்மாண வேலையை நாமே செய்து விடுவோமென்று மக்களை முயற்சியற்றவர்களாக்குவதே கூடாதது.

இன்று நாட்டில் ஒரு ஓய்வு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று ஒவ்வொரு வேலைக்கும் மக்கள் தம் முயற்சியை விட்டு அரசாங்கத்தை எதிர்நோக்கி நிற்கின்றார்கள். சுதந்திரமென்றால் மக்கள் சுதந்திரமாக தங்கள் வேலையை தாமே செய்து கொள்ளத் திடம் பெறுதல் வேண்டும். இன்று தலைகீழாக உள்ளது. முன்பு ஆங்கிலேயரை நம்பி வாழ்தல் இன்று அரசாங்கத்தை நம்பி வாழ்தல்! இவை யிரண்டிலும் வேற்றுமையில்லை. ஆகையால் கிராமதான வழியில் மக்களை அவர்கள் வேலையை அவர்களே செய்து கொள்ள ஊக்க வேண்டுமென்னும் வழியில் வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும். மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்டு வாழ்க்கை நலிவுறுகின்றது என்பதானாலும் மக்கள் மேம்பட முயற்சி செய்வதில்லை. இந்நிலை எனக்கு விளங்குவதில்லை. தொண்டர்களாகும் நமக்கு மக்களை விழிப்பித்து அவர்கள் முயற்சியாலேயே அவர்கள் மேம்பட முடியும் என்பதை அவர்களை உணரச் செய்ய வேண்டும். பதினேறு வருஷங்களாக சுதந்திர வாழ்வு பெற்றும் நாம் உணவிற்கும் மற்ற மூலத் தேவைகளுக்கும் பிறநாடுகளை எதிர்பார்த்து நிற்பது வெட்கக்கேடானதன்றோ? சுதந்திரம் பெற்ற பிறகு நாம் 1400 கோடி ரூபாய் உணவு தானியத்தை வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ளதைக் கண்டு நான் துன்பப்படுகின்றேன்.

விநோபாவடிகள் பல தடவைகளில் முன்னூறு கோடி இராணுவச் செலவு, ஒரு நூறு கோடி உணவு தான்யம் வாங்குதல், இரண்டு கோடி ஆட்சியமைப்பின் செலவு என்பதெல்லாம் இந்த எளிய நாட்டிற்கு எவ்வாறு பொருந்தும் என்று சொல்லியுள்ளார். அவரது இந்த ஆழ்ந்த சிந்தனையை நாம் அறிதல் வேண்டும். இந்தக் கவலை தீர வழிகள் கோலப்பட வேண்டும். அரசாங்கமே எல்லாவற்றிற்கும் பொறுப்பாளியென்றும் நான் சொல்ல மாட்டேன். மக்கள் விழிப்பு பெற்று இந்த செலவு கூடாதென்றால் அச்செலவு செய்யப்பட மாட்டாது.

நம் வலிவிற்கு இது பரிசீலனைக் காலம். யார் எங்கிருந்தாலும் அவர் அங்கேயே இந்த பிரச்னைகளை பரிகரிக்க வழி தேடவேண்டும். இது இரண்டொரு தலைவர்களைப் பொருத்த விஷயமன்று. தலைவர்களை நோக்கிக் கொண்டிருக்கலாகாது. எங்கு தொண்டன் உள்ளானோ அங்குள்ள நிலையை ஏற்றுக் கொள்ள வேண்டும். தொண்டர்களின் பயிற்சி முதல் வேலை என்பதாக எனக்குப் படுகின்றது. நாம் சர்வோதய சிந்தனைப் புரட்சியை கண்மூடி ஏற்றுக் கொள்ளுதல் கூடாது. காந்தியடிகளிடம் பாபா அவர்களிடம் கொள்ளும் பக்தியினாலும் ஏற்கலாகாது. அதில் சிறப்புள்ளதா சிறப்பு எது என்று ஆராய்ந்து அதை ஏற்க வேண்டும். சோஷலிஸம் கம்யூனிஸம் முதலிய வாதங்களின் அடிப்படைகளையும் நன்றாகக் கற்றறிதல் வேண்டும்.

நாடெங்கும் உள்ள இப்புரட்சித் தொண்டர்கள் என் சிந்தனைகளை நட்புரிமையுடன் ஏற்பார்கள் என்று நம்புகின்றேன். ★

# ஆட்டையும் வீட்டையும் கொடுத்த கிழவி

## ரவிசங்கர் மகராஜ்

*இவருக்குத் தாய்வைத்த பெயர் ரவிசங்கர். மக்கள் கொடுத்தது "மகராஜ்" பல ஆண்டுகளாக வாகனம் ஏறுவதில்லை. செருப்பு இல்லை. கால்நடை யாத்திரையில் நம் தேசத்தின்—தான—தர்ம நாகரீகத்தின் காட்சிகளை தர்சனம் செய்கிறார். அவைகளில் ஒன்று இது. தானாக வந்து ஆட்டைக்கொடுத்தாள் கிழவி. தானப்பசி அடங்கவில்லை. பிறகு தானாக வீட்டையும் கொடுத்தாள்—தானே தக்கவருக்கு விநியோகித்தாள். ரவிசங்கர் கிழவியின் சிந்தனையைத் தூண்டி பின்னால் நிழல்போல நின்றுகொண்டிருந்தார்.*

---

குஜராத்தின் சாபர்கண்டா ஜில்லாவின் ஒரு கிராமத்தில் நடந்த சம்பவம். பூதான வேலையாக நான் அங்கே போயிருந்தேன். கூட்டம் முடிந்தவுடனே ஒரு கிழத்தாய் என்னிடம் வந்தாள். "நாமோ ஏழை; நம்மால் என்ன செய்ய முடியும்" என்று அவள் மனதிற்குள் துடித்துக் கொண்டிருந்தாள். முதலில் கிழவி என்னிடம் ஏதோ கேட்க வந்திருக்கிறாள் என்று நினைத்தேன். ஆனால் பின்னர், கேட்கவரவில்லை; கொடுக்கவே வந்திருக்கிறாள் என்று தெரிந்துகொண்டேன். என் அருகில் வந்து அந்தக்கிழவி "ஐயா, தங்களுக்குக் கொடுக்கத்தகுந்தவை எதுவும் என்னிடம் இல்லை. இந்தப் பத்து ஆடுகள் இருக்கின்றன. இவற்றில் பால்தரக் கூடிய ஒரு ஆட்டைக் கொடுத்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா" என்றாள். அதற்கு நான் "ஏன் வாங்கிக் கொள்ளமாட்டேன்? விநோபாஜியின் இந்த வேள்வியில் "ஆடுதான"த்தையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். இந்த ஆட்டை நான் என்னோடு கொண்டுபோகமாட்டேன். நீயே இங்கிருக்கும் தகுதி வாய்ந்த ஒருவரைக் குறிப்பிட்டால் அவருக்கே இதைக் கொடுத்து விடுகிறேன்" என்றேன்.

"நான் ஆட்டைத்தங்களுக்கு தானமாகக் கொடுத்து விட்டேன். நீங்கள் யாருக்குத் தர விரும்புகிறீர்களோ கொடுங்கள்" என்றாள் கிழவி.

நான், "இந்த கிராமத்தில் யாரையும் எனக்குத் தெரியாது. ஆகவே நீயே இந்தகிராமத்தில் நல்ல தகுதி வாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடு" என்றேன்.

சற்றுயோசித்து தயக்கத்துடன் அந்தக்கிழவி "ஐயா எங்களுடைய கிராமத்தில் ஒரு தோட்டிப் பையன் இருக்கிறான். பாவம், அவன் தனியன். அவனுக்குக் கொடுத்தால்..." என்றாள்.

நான் அந்தத் தோட்டிப் பையனை அழைத்து வரச்செய்தேன். இதன் விபரம் அவனுக்குத் தெரிந்திருக்கக் கூடும். சிரித்துக் கொண்டே வந்தான். நான் அவனிடம் "இந்தத் தாய் உனக்கு ஒரு ஆடு கொடுக்கிறாள். நீ அதை வளர்ப்பாயா?" என்று கேட்டேன். அவன் மகிழ்ச்சியோடு "நிச்சயம் வளர்க்கிறேன்" என்று சொன்னான். ஆடு அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனது ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

பிற்பகல் உணவிற்குப் பிறகு நான் [illegible]க்கொண்டிருக்கும்



பொழுது மீண்டும் அந்தக் கிழவி வந்தாள். "ஐயா, நான் தனியாள்; எனக்கு இரண்டு வீடு இருக்கிறது. ஒன்றில் நான் வசிக்கிறேன்; மற்றொன்றில் ஆடுகளைக் கட்டுகிறேன். ஆடுகளைக்கொட்டிலிலேயேக் கட்டிக் கொள்ளலாம். ஆகவே என்னுடைய இரண்டாவது வீட்டையும் தானமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லத்தொடங்கினாள்.

சிறிது நேரம் நான் கிழவியைப் பார்த்துக்கொண்டே இருந்து விட்டேன். மற்றவருக்காகத் தன்னுடையதை தியாகம் செய்யும் இந்தப் பண்பைப் பார்த்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் கிழவியிடம், "அம்மா, உனது கிராமத்தில் வீடு–வாசல் அற்றவர் யாராவது இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

சற்று யோசித்தபின் கிழவி "ஆமாம், ஒரு காவற்காரன் இருக்கிறான். அவனுக்குக் கொடுத்தீர்களானால் மிகவும் சந்தோஷப் படுவான்" என்றாள்.

நான் காவற்காரனை அழைத்து வரச்செய்தேன். அவனும்வந்தான். நான் அவனிடம் "உனக்கு இருக்க வீடில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்றான்

"ஏன் ஒரு வீடு கட்டிக்கொள்ளக் கூடாது" என்றேன்.

"நான் கட்டிக்கொள்ளத்தான் விரும்புகிறேன். ஆனால் எனக்கு எந்த கிராமவாசியும் நிலம் தரமாட்டேன் என்கிறார்கள்".

"இந்தத்தாய் உனக்கு வசிக்க வீடு கொடுத்தால், நீ அதை ஏற்றுக் கொள்வாயா?"

"அவசியம் ஏற்றுக் கொள்கிறேன்".

"ஆனால் வீட்டைக் கொஞ்சம் பழுது பார்க்க வேண்டியிருக்கும்".

"அவைகளை நானே செய்து கொள்ளுகிறேன்".

நான் சிரித்துக்கொண்டே "ஆனால் ஒரு நிபந்தனை; இந்தக் கிழத்தாய் உயிரோடு இருக்கும் வரை நீ இவருக்கு சேவை செய்ய வேண்டும்" என்றேன்.

சேவை செய்ய வேண்டுமென்று நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தக்கிழவி கோபத்துடன் "இவன் எனக்கு சேவை செய்யவேண்டுமென்பதற்காக நான் வீடு கொடுக்கவில்லை. இவனுக்கோ வீடில்லை; என்னிடமோ ஒரு வீடு அதிகமாக இருக்கிறது. ஆகையால்தான் இதைக்கொடுக்கிறேன். நான் இதைக்கொண்டு யாரையும் எனக்கு சேவைசெய்ய சந்தர்ப்பமளிக்கமாட்டேன். நான் இறந்த பிறகும்கூட இவனிடமிருந்து யாரும் இந்த வீட்டைப் பிடுங்க முடியாதபடி நன்றாக எழுதிக் கொடுங்கள். இதுதான் தங்களிடம் என்னுடைய வேண்டுகோள்" என்றாள்.

கிழவியின் இந்த வார்த்தைகளைக் கேட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விட்டேன். கிழவியின் வாய் மூலமாக பாரதத்தின் தியாகமயமான கலாச்சாரமே பேசுவதாக உணர்ந்தேன்.

மூலம்—ஹிந்தி 'பூதானயக்ஞம்'

# ★ சர்வோதய பக்ஷம் ★

க. அருணாசலம்
(சஞ்சாலக், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி)

ஜனவரி, 30உ முதல் பிப்ரவரி, 12உ வரை சர்வோதய பக்ஷமாகக் கொண்டாடப்படும். இந்த நாட்களில் சர்வோதய இயக்கத்தைப்பற்றி மக்களிடையே நன்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். சர்வோதய தத்துவத்தின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கு சர்வோதய ஊழியர்கள் ஏன் பாடுபடுகிறார்கள், எப்படிப் பாடுபடுகிறார்கள் என்பதை மக்கள் எவ்வளவு நன்றாகத் தெரிந்துகொள்ளச் செய்கிறோமோ அந்த அளவுக்கு மக்களுடைய வாழ்வில் சர்வோதய வாழ்வை நோக்கி மலர்ச்சி ஏற்படும்.

மக்கள் உழைப்புக்குக் கொடுக்கும் கௌரவத்திற்கு அடையாளமாகத் தான் நூல் சிட்டத்தைக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டுமென்று காந்திஜி கூறினார். இத்துடன் சர்வோதய இயக்கத்தை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகவும், காந்திஜிக்கு செலுத்தும் அஞ்சலியாகவும நூல் காணிக்கை இருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் தொகை சர்வோதய இயக்க வேலைகளுக்கே பயன்படுத்தப்படுகிறது.

1958-ல் 55,805 சிட்டங்கள் நூல் காணிக்கையாகக் கிடைத்துள்ளன. இதன் பொருமானம் ரூ. 23,951—25, நூல் காணிக்கை சம்பந்தமான விளம்பரச் செலவும், ரசீதாகக்கொடுக்கப்பட்ட ஸ்டாம்புகள் செய்த செலவும் ரூ. 2,137—56 ஆயிற்று. மீதியில் சர்வ சேவா சங்கத்திற்கு ரூ. 1,968—95 கொடுக்கப்பட்டது. நிகர இருப்பு ரூ. 9,844—74 இருக்கிறது. இந்தத் தொகையை சர்வோதய இயக்க வேலைகளுக்காக கோவை, சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஜில்லாக்களுக்கும், மதுரை கிராமதான இயக்கத்திற்கும் ஆயிரம் ரூபாய் வீதம் பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இதை எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதென்பதை அந்தந்த ஜில்லா லோக் சேவக்குகளோடு சேர்ந்து தமிழ் நாடு சர்வோதய மண்டல் தீர்மானிக்கும்.

இந்த ஆண்டுக்கு தேச முழுவதற்குமாக 16 லட்சம் சிட்டங்கள் நூல் காணிக்கையாகப் பெறுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழ் நாட்டில் ஒன்றரை லட்சம் சிட்டங்கள்



நூல் காணிக்கையாகக் கிடைக்கவேண்டும். இதில் தமிழ் நாடு சர்வோதய சங்கமும் இதர நிர்மாண ஸ்தாபனங்களும் சேர்ந்து ஒரு லட்சம் சிட்டங்கள் சேர்ப்பதென்றும் சென்னை அரசாங்கக் கதர் இலாகாவினர் 50,000 சிட்டங்கள் சேர்ப்பதென்றும் முடிவாகியுள்ளது.

தமிழ் நாட்டில் நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்கள் அனைத்தும் சர்வோதய பக்ஷத்தில் இயக்கத்தைப் பரப்புவதிலும், நூல் காணிக்கை சேகரிப்பதிலும் திட்டவட்டமாய் வேலை செய்தால் மிகப்பெரிய பலன் ஏற்படும். தற்சமயம் மக்களிடையே மனச்சோர்வு நீங்கி எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும் சர்வோதய இயக்கத்தில் பற்றுதலும் பிறக்கும். இது மிக மிகப் பெரிய பலனாகும். இத்துடன் நாம் எதிர்பார்ப்பதற்கும் மிக அதிகமாகவே நூல் காணிக்கைச் சேரும். நூல் காணிக்கை என்பது சர்வோதய இயக்கத்திற்கு ஆதரவாகக் கிடைக்கும் வாக்கு என்று மக்கள் உணர்ந்து நூல் காணிக்கைக் கொடுக்கும்படி செய்ய வேண்டும். புனிதர் வினோபாஜி அவர்கள் நூல் காணிக்கையில் விசுவ ரூப தரிசனம் காண்கிறேன் என்று கூறியுள்ளார். ஆழ்ந்து சிந்தித்தால் இதன் பொருள் விளங்கும். சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்க சமுதாயமே முன் வந்து கொடுக்கும் வாக்குரிமைதான் நூல் காணிக்கை. எனவே சர்வோதய பக்ஷத்தில் எவ்விதம் வேலை முறைகளை வகுத்துக்கொள்ளலாம் என்பதற்கும் சில குறிப்புகளைக் கொடுக்கலாம்.

1. பாத யாத்திரைகள்
2. நில தானம் பெறுதல்
3. நில விநியோகம் செய்தல்
4. கிராம தானங்கள் பெறுதல்
5. சர்வோதய இலக்கிய விற்பனை
6. சமூகத் துப்புரவு
7. பொதுக்கூட்டங்கள்
8. நூல் காணிக்கை சேகரித்தல்
9. கதர் கட்டுதல், கைக்குத்தலரிசி உபயோகித்தல், சுதேசி சாமான்களையே வாங்குதல் ஆகியவற்றிற்கான சங்கற்பங்கள் பெறுதல்.
10. சர்வ சமயப் பிரார்த்தனைகள் நடத்துதல்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் சர்வோதய இயக்க ஊழியர்கள், சர்வோதய சங்க ஊழியர்கள், காந்தி நினைவு நிதி ஊழியர்கள், ஹரிஜன சேவக சங்க ஊழியர்கள், ஆதாரக் கல்வி ஆசிரியர்கள்,

ஹிந்தி பிரசார சபா ஊழியர்கள் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களும், காந்தி நிகேதன் ஆஸ்ரமம், காந்தி கிராமம் போன்ற ஸ்தாபனங்களும், நூற்றுக்கணக்கான வாசகசாலைகளும், தம் வாழ்நாட்களை முழுதும் சமூக சேவைக்கு அர்ப்பணித்த பெரியோர்கள், இளைஞர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் இவர்கள் அனைவரும் இந்த சர்வோதய பக்ஷத்தில் ஒரு முகமாய் வேலை செய்தால் ஒரு மகத்தான சக்தி ஏற்படுவதோடு, மக்களிடையே நல்ல பிரசாரமும் ஏற்படும்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாட்டில் சில குறிப்பிட்ட இடங்களில் பிப்ரவரி 12-ம் தேதியன்று சர்வோதய மேளாக்கள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு இந்த மேளா தினத்தைக் கொண்டாடுவதற்கு முந்திய ஆண்டுகளைப் போலவே திட்டமிடுவதோடு ஜனவரி 30-ம் தேதி முதல் பிப்ரவரி 12-ம் தேதி வரை உள்ள 14 நாட்களுக்கும் ஒரு நல்ல திட்டமிட்டுக்கொண்டு அந்தந்தப் பிரதேசங்களில் அதை நிறைவேற்றுவது நல்லது. மேளா ஸ்தலத்திற்கு வரும் ஒவ்வொரு கோஷ்டியும் இந்த 14 நாட்களும் குறைந்த பட்சம் 14 ஊர்களிலாவது இயக்கத்தைப்பற்றிய செய்தியை வீடு வீடாகச்சென்று கூறி சர்வோதய இலக்கியங்களைக் கொடுத்து நூல் காணிக்கை சேர்த்துக்கொண்டு பொதுக்கூட்டங்களும் நடத்தி வருவது நல்லது.

★

### சென்ற பதினோறு அகில இந்திய சர்வோதய சம்மேளனம்

| | | | | |
|---|---|---|---|---|
| செ. | 1948 | மார்ச் | சர்வோதயசமாஜம் | சேவாகிராமத்தில் ஆரம்பம் |
| 1. | 1949 | ,, | இந்தூர் (ராவ்) | ராஜஸ்தான் |
| 2. | 1950 | ,, | அங்குல் | ஒரிஸ்ஸா |
| 3. | 1951 | ,, | சிவராம்பள்ளி | ஹைதராபாத் |
| 4. | 1952 | ,, | காசி | உத்திரபிரதேச |
| 5. | 1953 | ,, | சாண்டில் | பீஹார் |
| 6. | 1954 | ,, | புத்தகயா | பீஹார் |
| 7. | 1955 | ஏப்ரல் | பூரிஜகந்நாத் | ஒரிஸ்ஸா |
| 8. | 1956 | மே | காஞ்சீபுரம் | தமிழ்நாடு |
| 9. | 1957 | ,, | காலடி | கேரளம் |
| 10. | 1958 | ,, | பண்டரிபுரம் | மகாராஷ்டிரம் |
| 11. | 1959 | பிப்ரவரி | ஆஜ்மீர் | ராஜஸ்தான் |

# வினோபாஜியின் சௌராஷ்டிர யாத்திரை

## கதரையும், விவசாயத்தையும் இணைக்கவேண்டும்

ராஜ்கோட்டில் வினோபாஜி நிர்மாண ஊழியர்களிடையே பேசும்போது குறிப்பிட்டதாவது "கதரையும், விவசாயம் கிராம நிலப்பிரச்னையுடன் இணைக்க வேண்டும். அத்துடன் இணைக்கப்படாவிட்டால் கிராம நிர்மாணத்திற்குக் கதர் பிரசாரம் பயன்படாது. கதர் கிராமத்தில் ஒரு புதிய விருந்தாளியாக மட்டும் சென்றால், அவ்வாறே வெளியேறும். கிராம நிலப்பிரச்னையுடன் இது ஒன்றி விட்டால் என்றும் நிலைத்து நிற்கும்."

"கிராமத்திலுள்ள மக்கள் நகரங்களுக்கு வெளியேறுவதால் இரண்டு பெரிய நஷ்டங்கள் ஏற்படுகின்றன. சரீர உழைப்பாளிகள், புத்தியால் சிந்திப்பவர்கள் ஆகிய இரு தரப்பாரும் நகரங்களுக்குப் போய்விடுகிறார்கள். தொழிற்சாலைகளும், பள்ளிக்கூடங்களும் நகரங்களிலேயே ஏற்படுகின்றன. இதையொட்டி மேலும் கிராம வாசிகள் வெளியேறத் தூண்டப்படுகிறார்கள். இவ்வாறு உழைப்பும், அறிவும் கிராமத்தைவிட்டு வெளியேறுவதுடன் சமூக அமைதி என்பதும் இல்லாமல் போய்விடுகிறது."

(ராஜ்கோட்: நவ. 24)

### சௌராஷ்டிராவில் வினோபாஜி:

கிருஷ்ண பகவானும், சுவாமி தயானந்த சரஸ்வதியும், மகாத்மா காந்திஜியும் பிறந்த சௌராஷ்டிராவில் வினோபாஜி தனது ஒருமாத யாத்திரையை நவ. 8-ம்உ தொடங்கினார். குஜராத்தின் காம்பேயிலிருந்து நீராவிப்படகில் பாவ்நகருக்குத் தாண்டிச் சென்றார். பூதான-கிராமதான யாத்திரை தொடங்கிய பிறகு வினோபாஜி செய்த முதல் கடல் யாத்திரை இதுவே!

எங்கும் மக்கள் வெள்ளம். பாவ்நகரில் நுழைந்தவுடன் காந்திஜியின் சித்திரங்களை எல்லாம் பார்த்து பழைய நினைவுகள் அலைமோத கண்ணீர் துளிர்க்க ஐந்து நிமிடங்கள் பேசாமல் நின்றார்.

போலீசும் தொண்டர்களும் கைகோர்த்து தரிசனத்திற்காகக் காத்திருக்கும் மக்களை விலக்கினார்கள். ஆனால் நேருவைப்போல வினோபா போலீசையும், தொண்டர்களையும் கலைத்துவிட்டு மக்கள் தரிசனத்திற்காக அவர்களோடு கலந்துவிட்டார்.

சனோரா என்ற கிராமத்தில் ஆதாரக் கல்வி ஊழியர்கள் மாநாடு நடைபெற்றது. தேபரும் அதில் கலந்துகொண்டார். அவர் வினோபாஜியுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். அடுத்து வருகின்ற பொதுத்தேர்தலில் குறைந்தபக்ஷம் 40% புதியவர்களுக்கு அபேக்ஷகர்களாக இடமளிப்பதாக தேபர் வாக்களித்தார்.

வினோபா தனது சௌராஷ்டிர யாத்திரையில் அழகிய குஜராத்தியில் பேசுகிறார். பத்திரிகை நிருபர்களையும் தன்னுடன் ஹிந்தி அல்லது குஜராத்தியில் பேசும்படி வற்புறுத்தினார்.

நில விநியோகத்தைப்பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு வினோபா "நான் இதைப்பற்றி அவசரப்படவுமில்லை; கவலைப்படவுமில்லை. கிடைத்த நிலங்கள் விநியோகிக்கப்படும். பல ராஜ்யங்களில் பாதிக்குமேல் விநியோகம் செய்யப்பட்டு விட்டது. ஆனால் அதிகமாகக்கிடைத்த பீஹார் ஜில்லாவில் கணிசமான அளவு விநியோகிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் ஊழியர்கள் இதற்காக முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். பூதான கிராமங்களை கிராம தானமாக

ஆக்கும் முயற்சியும் நடைபெறுகிறது. ஆகவே பூதான விநியோகம் கிராம சபைகள் மூலம் எளிதாகி விடும்,'' என்று பதிலளித்தார்.

வெளி நாட்டிலிருந்து கடன் வாங்குவது சம்பந்தமாக அவர் சொன்னதாவது ''ஒரு நிபந்தனையுமின்றி கடன் வாங்குவதைப்பற்றி நான் குறைசொல்லவில்லை. இருந்தாலும் இதிலும் ஒரு அபாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆகவே இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஒரு தேசம் வெளி உதவியைக்கொண்டே முன்னேறமுடியாது. கிராமங்கள் தன் காலிலேயே நிற்கும் தகுதியைப்பெற வேண்டும். அவைகளின் வாழ்க்கைத் தேவைகளை அவைகளே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நாம் திட்டமிடாவிட்டால் தேசம் முன்னேற முடியாது.''

ஜெயப்பிரகாஷ் நாராயண், தலைவர்கள் தங்கள் பதவியைவிட்டு தேச புனருத்தாரண வேலைகளில் ஈடுபடவேண்டும் என்று வற்புறுத்துவதைப்பற்றிப் பத்திரிகை நிருபர்கள் பாபாவிடம் கேட்டார்கள். அதற்கு பாபா ''பெரியவர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் சொல்ல எனக்கு உரிமையில்லை. கட்சி அரசியலையும், பதவிகளையும் விட்டு விட்டு மக்களிடையே புதிய ஜனசக்தியை தூண்ட வேண்டுமென்று நான் பொதுவாகச் சொல்லி வருகிறேன். ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் அரசியல் தலைவர்களும், நீதிபதிகளும் தங்கள் பதவிகளிலிருந்து விலகி சுதந்திரமாக, கூடுமானால் ஜனங்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அரசியல் வாதிகளுக்கு இம்மாதிரி ஒரு விதி ஏற்பட்டால் பொது மக்களின் முயற்சிகளுக்கு பலம் ஏற்படும். இதுவரை சந்தர்ப்ப மளிக்கப்படாத மற்ற புதியவர்கள் முன்னால் வாய்ப்பு ஏற்படும். அவர்களுக்கு அனுபவம் பெற்றவர்களின் ஆலோசனையும் பின்னால் இருந்து கிடைக்கலாம்.''

''பதவியிலிருப்பவர்கள் கடைசி மூச்சு உள்ளவரை அதிலேயே இருந்து இறந்துவிட்டால் புதிதாக வருபவர்கள் அவர்களுடைய யோசனையில்லாமல் திண்டாடுவார்கள். அரசியல் வாதிகளுக்கு இம்மாதிரி ஒரு நியமம் ஏன் இருக்கக் கூடாது என்பது எனக்குப் புரியவில்லை,'' என்று சொன்னார்.

(ராஜ்கோட்: நவ. 24)

## நான் மத்தியஸ்தராக இருக்கத் தயார்!

விநோபாஜி இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையே உள்ள கால்வாய் தண்ணீர் தகராறுகளை அவர்கள் தன்னுடைய நிபந்தனையை ஒப்புக்கொண்டால் தான் மத்தியஸ்தராக இருந்து அதைத்தீர்த்து வைப்பதாகச் சொன்னார். ஒரு பெரிய கூட்டத்தில் பாபா பேசுகையில் 'இந்தியாவும் பாகிஸ்தானும் இரண்டு சகோதர நாடுகள். நாம் பாகிஸ்தானைக் கண்டு பயப்படுகிறோம். ஆகையால் அது நம்மைக் கண்டு பயப்படுகிறது. கணிசமான தொகை இந்த ராணுவப்போட்டியில் வீணாக்கப்படுகிறது. இரண்டு நாடுகளும் நெருங்கிவந்து, ஒரு பொதுவான வெளி நாட்டுக் கொள்கையை அமைத்துக் கொண்டால், இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயார். இந்தப் பைத்தியக்காரத்தனமான ராணுவப்போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் ரூ. 400 கோடிக்குமேல் செலவழிக்கின்றன'' என்றார்.

(ராஜ்கோட்: நவ. 22)

## மக்களிடம் என்னதான் இருக்கிறது?

''மக்களிடம் எங்கு பார்த்தாலும் இக்கற்ற நிலைமையே நான் காண்கிறேன். கிராமங்களின் எல்லாப் பிரச்னைகளை



யுமே தீர்க்க அரசாங்கத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் பரிதாபநிலை இங்கு இருக்கிறது; மத சம்பந்தமான காரியங்களை பூசாரிகளிடமும், மதத் தலைவர்களிடமும், சமூகக் காரியங்களை சட்டசபை – லோகசபை முதலியவைகளிடமும் விட்டு விடுகிறார்கள். மக்களிடம் பிறகு வேறு என்ன தான் இருக்கிறது?''

(ராஜ்கோட்: நவ, 15)

## அவர்களின் மனமும் திரும்பும்!

வெளி ஏதேச்சாதிகார நிலச்சுவான் தார்களைப்பற்றி பாபா பேசியதாவது ''நான் பார்த்தமட்டில் இவர்கள் விசேஷ புத்தி உள்ளவர்களாக இருக்கிறார்கள்; சிலர் அனுதாபம் உடையவர்களாகவும், இருக்கிறார்கள். இன்னும் சிலரிடம் அறிவு, அனுதாபம் இரண்டும் இருக்கிறது. ஆகையால் இவர்களிடத்தில் தற்காலத்தில் கருத்தில் ஏற்பட்டிருக்கும் முற்போக்குப் பற்றியும், சமூக நீதியின் அவசியத்தைப் பற்றியும் அவர்களுக்கு நாம் புரியும்படி விளக்கினால் அவர்கள் மனமும் திரும்பும்.

''பூதான ஊழியர்கள் எந்தக் கட்சியிலும் சேராது இருந்துகொண்டு வேலை செய்யவேண்டும். அதே சமயத்தில் பூதான ஊழியர்கள் மனோபாவத்தில் அரசியல் விரோதிகளாகவும் இருக்கக் கூடாது.'' என்று எச்சரித்தார்.

(ராஜ்கோட்: நவ. 23)

## நீங்கள் சிறந்த பிரஜைகளாகவும் மகான்களாகவும் ஆவீர்கள்!

பாவநகர் வார்டேஜ் என்ற கிராமத்தில் மத்திய ஜெயில் கைதிகள் ரூ. 80/- சம்பத்து தானமாகக் கொடுத்தார்கள். 165 நூல் சிட்டங்களும் தானமாகத் தரப்பட்டது. புருஷோத்தம் லால்ஜி என்ற சிறைவாசி தன்னுடைய 2½ பீகா நிலத்தை பூதானமாகக் கொடுத்தார்.

இதைப்பற்றி பாபா பேசினார். ''ஒவ்வொருவரும் சமுதாயத்திலிருந்து எடுத்துக்கொள்வதற்கு முன்னால் ஏதாவது கொஞ்சம் சமுதாயத்திற்குத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.. சமுதாயத்திற்குத் தன்னுடைய சேவைகளை அர்ப்பணிக்கத் தயாராக இருந்தால் தான் பூமியில் பிறந்த உரிமையை அனுபவிக்க முடியும். இல்லாவிட்டால் அவன் சமுதாயத்திற்கே சுமையாகிவிடுவான்.''

தான் சிறையிலிருந்த காலத்து அனுபவங்களை யெல்லாம் சொல்லி அவருக்கும் பிற கைதிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லையென்று சொன்னார். ''சிறிய குற்றங்களுக்காகவோ, அல்லது பெரிய குற்றங்களுக்காகவோ நீங்கள் சிறையிலிருக்கிறீர்கள். இங்கிருந்து வெளியே போகும்போது மீண்டும் இந்த மாதிரி குற்றங்களைச் செய்வதில்லை என்ற உறுதியோடு சென்றால் நீங்களே சிறந்த பிரஜைகளாகவும், மகான்களாகவும் ஆவீர்கள்'' என்றார்.

(வார்டேஜ்: நவ. 10)

## ஜாம்நகரில் விநோபாஜி

விநோபாஜி ஜாம் நகருக்கு நவ. 27உ காலை ரவிசங்கர் மகாராஜோடு வந்து சேர்ந்தார். 25,000 மக்களுக்குமேல் வழிநெடுகிலும் வரிசையாக நின்று ஆரவாரத்தோடு பாபாவை வரவேற்றார்கள். எல்லா ஸ்தாபனங்களும், வியாபாரிகளும் இதில் கலந்துகொண்டார்கள்.

ஒரு ஊழியர், ஆசிரியர் எப்படியிருக்க வேண்டும்? என்ற கேள்விக்கு பாபா பதில் கூறுகையில் ''ஒரு ஊழியன் மக்களோடு ஒன்றாகக் கலந்திருக்கவேண்டும். ஆனால் நான் எதிர்பார்த்த வகையில் ஊழியர்களைப் பார்க்க முடியவில்லை. தேர்தல் முறைகள் தான்

யான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. மக்கள் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை; ஸ்தாபனங்களே தேர்ந்தெடுக்கின்றன மக்களும் ஊழியர்களுக்குத் திறமையோ, சேவா பாவமோ இருக்கிறதா? என்றுப்பார்த்து ஓட்டளிக்கவில்லை. எந்த ஸ்தாபனம் அவர்களை நிறுத்துகிறதோ, அதைப் பார்த்தே ஓட்டளிக்கிறார்கள். இதன் பலனாக விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிலரே உண்மையான ஊழியர்கள் கிடைக்கிறார்கள். இது ஊழியர்களுக்கு மட்டுமல்ல; ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஒரு ஆசிரியர் கிரகித்துள்ள படிப்பு ஒரு நல்ல ஆசிரியருக்குத் தேவையான அளவு இல்லை.

"சுதந்திரம் கிடைத்தவுடன் எல்லாம் நன்றாகி விடுமென்று எண்ணினோம். ஆனால் நிலைமை நாம் எதிர் பார்த்தபடியல்ல, அதைவிட மோசமாகவே இருக்கிறது" என்றார்.

(ராஜ்கோட்: நவ, 24)

❊

## காந்தியே ஏசுவின் உண்மை சீடர்

ஏசுநாதருக்குப் பிறகு உண்மை கிறிஸ்தவர், தலைசிறந்த கிறிஸ்தவர் காந்திஜியே. தத்துவ போதனையுடன் அவர் நிற்கவில்லை. வாழ்க்கையில் அதை நடத்திக் காட்டினார். அதற்காகவே உயிரையும் விட்டார். காந்திஜி ஏசுநாதரின் உண்மை சீடர் என்று வாயார, மனமாறப் புகழ்ந்திருக்கிறார் அல்ட்ரிசாம் பிரபு.

பத்திரிகைக் கட்டுரையொன்றில் இங்கிலாந்தின் சர்ச் அமைப்பைச் சாடியிருக்கும் இந்த பிரிட்டிஷ் பிரபு காந்திஜி காட்டிய வழியில் அது சீரமைய வேண்டும் என்று யோசனை கூறியுள்ளார்.

கிறிஸ்தவ பாதிரிமார்கள் பகட்டு உடையணிந்து உல்லாச வைபவங்களில் கலந்து கொள்ளுவதை அவர் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

"நான் மட்டும் இங்கிலாந்தின் பிரதான மதகுருவாயிருந்தால் அரசாங்கம் தவறி நடக்கும் காலங்களில் அதை அழுத்தமாகக் கண்டிக்கத் தவற மாட்டேன். சூயஸ் கால்வாய் தகராறு காலத்தில் ஆங்கில மக்களின் மனச் சாட்சியை தட்டி யெழுப்பியிருப்பேன். இனவெறி பிடித்தவர் கலகம் செய்த காலையில் அந்த அநியாயத்தை அழுத்தந் திருத்தமாகக் கண்டித்து புத்தி புகட்டியிருப்பேன்" என்று அல்ட்ரிசாம் பிரபு அக்கட்டுரையில் கூறுகிறார்.

—தினமணி 15–1–59.

134078

# சர்வோதயத்திற்கு இதயத்தைத் தாருங்கள்

குன்றக்குடி அடிகளார்

நாம் தற்போது காணும் வழிகள் யாவும் புதியனபோன்று தோன்றினாலும் பழையனவே! புதிய கருத்துக்களுக்கு நாடு, இனம், மொழி என்றவேறுபாடு கிடையாது. அந்த உயர்ந்த பண்பாடுதான் நமக்குத் தேவை! அத்துறையில் சிந்திக்குங் கால் பாரதியும், வினோபாவும் நம் முன் [illegible]றுகிறார்கள்; இருவரும் சத்தியத்தின் உருவங்கள்.

வாழவே பிறந்தோம்; வாழ்க்கை வாழ்வதற்கே. ஆண்டவன் நமக்கு ஒரு அருமையான வாழ்க்கையைக் கொடுத்தார். நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவாருண்டோ! அதை நன்முறையில் பயன்படுத்தி நலம்பெற வேண்டும். தனித்து, சமுதாயத்தினின்று விலகி வாழ்ந்தால் தான் வீடுபேற்றை அடையலாம் என்பதும் சரியல்ல. நாம் சிறந்த, தூய, ஏனையோரும் பின்பற்றக்கூடிய வழியையே கடைப்பிடிக்கவேண்டும்.

"வாழ்வர்வது மாயம்; மண்ணாவது திண்ணம்" என்றுப்பாடியவன் பைத்தியக்காரனல்ல. உழைப்பை மறந்து, உண்டு வாழ்ந்தவனுக்கு "உன்னுடைய உழைப்பே, அதனால் விளைந்த நற்செயலே நிலைத்து நிற்கும்" என்று அறிவுறுத்தவே அப்படிப் பாடினான். பெரிய மாளிகைகளில் சில அரசர்கள் துறவு வசிப்பார்கள். அங்கு துறவு நிலை ஏற்படுவதில்லை. ஆடம்பரமான சூழ்நிலையில் அகம்பாவம் தான் தலைதூக்கி நிற்கும். [illegible] நிலை அங்கு உண்டாவதில்லை.

ஒரு புறம் ஏழை, ஏழையாகிக் கொண்டே இருக்கிறான்; இன்னொருபுறம் வசதியுள்ளவன் மேலும், மேலும் சேர்த்து வைத்துக்கொண்டேப் போக விரும்புகிறான். "சாத்திரத்தால் சாதிபேசும் சழக்கர்கள்" என்றார் ஞானசம்பந்தர். "இப்பொன் நீ, மணி நீ, முத்து நீ" என்று பாடிய தேவாரமும் சும்மா பாடப்பட்டதில்லை. வாழ்க்கைக்குத் தெளிவு வேண்டும்; அதில் மேடுபள்ளங்கள் இருக்கக் கூடாது என்பதற்காகவே பாடப் பெற்றது. சமுதாயத்தில் மேடுபள்ளங்கள் இருந்து விட்டால் அவை அறம் என்ற ஒன்றிற்கு நோவு தருகின்றன. ஆகவே மேடுபள்ளமற்ற ஒரு சமத்துவமான சமுதாயமே இன்று தேவை.

வெகுளாமைப் பற்றிப் பேசிய வள்ளுவருக்குக் கூட கோபம் வருகிறது. சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக்கண்டு மனம் வெகுண்டு கடிந்துரைக்கிறார்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்,
பரந்துகெடுக உலகியற்றி யான்."

என்றார் குறளில். ஆனால் அவரது வெகுளி தனித்தன்மையோ, தன்னலமோ உடையது அல்ல; பொது நலம் காரணமே விளைகிறது. பாரதியும் "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்

திடுவோம்" என்றான். இது ஆபத்தானது என்றாலும் சமுதாயம் சீர்படவேண்டுமென்றே இவ்வாறு கடிந்து கூறினான். ஆனால் சொல்லுவதைக்காட்டிலும் அதைச் செயல்படுத்துவதே சிறந்தது. அன்று பாரதி சொன்னான்; இன்று பாவே அதை செயல் படுத்திக் காட்டுகிறார். பாரதியின் வழியில் பாவே இன்று சிறந்த தொண்டாற்றி வருகிறார். "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே மாற்றியமைப்போம்" என்கிறார் வினோபா.

இன்று நாட்டில் ஒரு உண்மை ஊழியனுக்கு இல்லாத மதிப்பு சொத்துடையவனுக்கு இருக்கிறது. சர்க்கார் கூட நிவாரணக் கடன்கள் அளிக்கச் சொத்து ஜாமீன் கேட்கிறது. சொத்துக்களுக்குத் தற்போது உள்ள மதிப்புக் குறையவேண்டும். சொத்துடைமையால் வரும்கௌரவம் ஒழிக்கப்படவேண்டும் "அவன் நல்லவன்; நாட்டிற்காக வாழ்பவன்" என்ற பெயர் பெற்றவனுக்கே கௌரவம் அளிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட நிலை வருமானால் இந்நிலைமையேமாறிவிடும். நிலத்தைக் கொடுத்தாவது கௌரவமும், பெயரும் பெற விழைவர்; நிலப் பிரச்னையும் தீர்ந்துவிடும்.

கிராம ராஜ்யம் வரவேண்டும். இது ஒரு அற்புதமான கருத்து. இது செயலுக்கு வந்துவிட்டால் மிகவும் நல்லது. சர்வோதயம் என்றால் எங்கும் எப்பொழுதும் எல்லோரும் நலமாக வாழவேண்டும் என்பதே! இதனால் நிலச்சுவான்தார்களின் மனம் வெகுவாக மாறி வருகிறது. "ஒன்றும் தர இயலாவிட்டால் உங்கள் இதயத்தையாவது கொடுங்கள்" என்கிறது இந்த இயக்கம். இதன் மூலம் பொறாமைக்காரர்களின் எண்ணிக்கையாவது குறையுமல்லவா?

வினோபாஜி அமைக்க விரும்பும் கிராம ராஜ்யம் — ராம ராஜ்யம், எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்றுக் கொள்வாரும், கொடுப்பாரும் இல்லாத சமுதாய அமைப்பே! அமெரிக்க நாடுகளில் நல்லெண்ணத்திற்குப் பஞ்சம். ஆனால் இங்கு காந்திஜி, வினோபா போன்றவர்கள் அன்பு-அறம் வளரவேண்டுமென்று பாடுபட்டார்கள் — பாடுபடுகிறார்கள். இதனால் அரசியலுக்கு லாபமோ இல்லையோ! நமக்கும் — சமூகத்திற்கும் லாபம்.

இனியாரும் தனித்து வாழமுடியாது. மனிதன் கூடிவாழவேண்டிய கட்டாய நிலை வந்துவிட்டது என்பதை உணர்ந்து, தங்களிடையே அன்பை வளர்த்துக்கொண்டு, கூட்டுச் சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும், இந்த பாரதி—வினோபா நாளில் உறுதிகொள்வோமாக!

(திருத்துறைப்பூண்டி ஹிந்தி பிரேமி மண்டலும், காந்திமன்றமும் இலக்கிய பட்சத்தையொட்டி ஏற்பாடு செய்தக் கூட்டத்தில பேசியது. சர்வோதய இலக்கிய பட்சத்தில் இவர்கள் ரூ. 200-க்கு இலக்கியம் விற்றது குறிப்பிடத்தக்கது.)

★

# ★ கிராம ராஜ்யமும் உலக நீதியும் ★

கோரா. ராமச்சந்திர ராவ்

(தெலுங்கிலிருந்து ஸ்ரீ நெரூர் சிவசுப்ரமணியன் அவர்கள் மொழிபெயர்த்தது)

மக்களிடையே சிலமிகுமளவிற்கே அமைப்புகள் பயன்படுவன. இன்றே சிறு அமைப்புகளிலும் குடும்பங்களிலும் முறையை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மைஉள்ளது. சிற்றமைப்புகளில் நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை விரிவதின்றி குறுகி விடுகின்றது. குடும்பத்திலுள்ளவர்கள் தங்களுக்குள் பொய் பேசுவதில்லை, ஒருவரையொருவர் தொல்லைப்படுத்துவதில்லை, தங்களுக்குள் சகிப்புத்தன்மையுடன் இணைந்து வாழ்கின்றார்கள். இவை உள்ளதினாலேயே குடும்பம் நடைபெறுகின்றது. கம்யூனிஸ்டுகளும் தங்கள் அமைப்புகளுக்குள் இவ்விதம் வாழ்கின்றார்கள். ஆயின் இவர்கள் தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாயுள்ளவர்களுடன் பழகும் பொழுது வேறு நியதியை ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். சிற்றெல்லைக்கு வெளியேமோசம், வஞ்சனை, சண்டை இவைகளெல்லாம். அமைப்பிற்குள் ஒரு நியாயம் வெளியே ஒரு நியாயம் என்றிருப்பதால், உள்ளும் வெளியே உள்ள அநீதமே நிலைபட்டு விடுகின்றது. அமைப்பினால் மனிதன் மேன்மையடைய வேண்டின் அமைப்பிற்குள்ளும் சரி வெளியேயும் சரி அவன் ஒரே நியதியைக் கையாள வேண்டும். குடும்பத்திற்காகும் உறவுகள் புறத்தேயும் அமைதல் வேண்டும்.

அமைப்புகள் மூன்று அடிப்படைகளில் ஏற்படலாம். மதநம்பிக்கை, அரசியல், உலக நீதி.

தெய்வபக்தி, மோக்ஷ ஆசை, நரக பயம், விதியில் நம்பிக்கை இவைகளால் மக்கள் நியதியை ஏற்று அநீதியை கைவிடுகின்றார்கள். இன்று கூட கடவுள் நம்பிக்கை கொள்பவர் நீதியையும் ஏற்றுக் கொள்கின்றார்கள். தெய்வ பக்தி குறைவுபடுவதால் நீதியில் பற்றும் போம். அப்பொழுதே அரசநீதி தோன்ற வழியாகின்றது. அரசியல் அடக்கி வைக்க வருவது. நேரடியாக நீதியை வற்புறுத்த அதற்கு இயலாதாயினும் நீதி தவறின் தண்டனைகளை விதிப்பதால் அவ்வமைப்புக்கு வலிவுள்ளது. இறந்த பிறகு நரக மோட்சங்களல்ல, உடனடியாக தண்டனைகள் அபராதங்கள் என்பவை மனிதனை அதிகம் கட்டுப்படுத்துகின்றன. கடவுள் நம்பிக்கை ஒருவன் தானாக மேற்கொள்வது, அரச நீதி அவன்மீது கட்டாயமாகச் சுமத்தப்படுகின்றது.

சமய நம்பிக்கை மூடநம்பிக்கையுமாகலாம், அரச நீதி நிர்ப்பந்தமேயாகும், சமயங்கள் பிற சமயங்களுடன் மோதவே இடம் வருக்கின்

றன. அரசநீதி சமத்துவமின்மையையே நிலை நாட்டுகின்றது. ஆகையாலேதான் மக்கள் தாமாகவே ஏற்றுக்கொள்ளக் கூடிய உலக நீதியை விநோபாவடிகள் வற்புறுத்துகின்றார்.

உலக நீதி யென்றால் சத்தியம், சகிப்பு, சமத்துவம் இவைகளை முற்றுமாகக் கையாளுதல். தாய் தன் மக்களை வளர்த்தலும், கணவன் மனைவிமார்கள் கூடிவாழ்தலும் உதாரணமாகச் சொல்லலாம். அவைகளை அவர்கள் கைவிட மாட்டார்கள். தொன்றுதொட்டு வரும் முறைகள் அவை. அவ்விதம் மக்கள் அனைவரும் சத்தியம், சகிப்பு, சமத்துவம் இவைகளை கையாள ஏற்றுக் கொள்வதே உலக நீதி.

உலக நீதியை ஏற்றுக்கொண்டு விட்டால் சமயக் கோட்பாடும், அரச நீதியையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அக்கரையில்லை. மக்களைப் புறக்கணிக்கும் தாய், பழிக்குப் பாத்திரமாவதுபோல சத்தியம், சகிப்பு, சமத்துவம் இவைகளை ஏலாதவர்களை உலகம் பழிக்கும். அதனாலே அவர்கள் திருத்தப்படுவார்கள்.

அமைப்பு முறைக்கு உலக நீதியே சிறந்தது. ஆயின் மதப்பற்றும் அரசாட்சியும் நிலையாக உள்ளதினால் உலக நீதியைப் பரப்ப மக்களாட்சி முறையும் பேரளவிற்கு உதவுவதாகலாம். அதில் மூட நம்பிக்கைக்கு வழியில்லை, அரசனது எதேச்சாதிகாரத்திற்கும் இடமில்லை, மக்களாட்சி முறை நம்மை உலக நீதியை ஏற்க அழைத்துச் செல்லும்.

மக்களாட்சி என்றால் மக்கள் தம்மைத்தாமே ஆண்டு கொள்ளுதல். ஆயின் இன்றைய அறிவு வளர்ச்சியுடன் ஒவ்வொருவனும் ஆட்சியில் பங்கு கொள்ளத் தகுதி பெற்றிருக்கவில்லை. ஆகையாலேயே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் ஆட்சி நடத்தல் முறை அமலிலுள்ளது. மக்களின் பிரதிநிதிகள் மக்களின் மனோபாவங்களை அறிந்திருப்பவர்களாயின், ஆட்சியில் மக்களுக்கு சுயேச்சை கிட்டும். ஆயின் பல இலட்ச மக்களின் பிரதிநிதிகளாவோர் மக்களின் மனோபாவங்களை அறிதல் கூடுவதில்லை. மேலும் பிரதிநிதியும் தன் விருப்பு வெறுப்புகளைப் பெற்றுள்ளவரே. தேர்தலிற்குப்பிறகு வாக்காளர்களைப் புறக்கணித்து தன் சுயநலத்தைப் பெருக்க முனைந்து விடுதலும்கூடும். அவ்விதம் தன் பிரதிநிதித்துவத்தை அவர் துர் உபயோகப்படுத்தவும் கூடும்.

வாக்காளர்களின் எண்ணிக்கைப் பெருகப் பெருக வாக்காளர்கள் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்துவது கூடுவதில்லை. மக்களாட்சியில் உள்ள பெருங்குறை இது. உண்டி, உடுக்கை சுதந்திரம், நீதி இவைகளை மக்கள் ஜனநாயகத்தினின்று எதிர்பார்க்கின்றார்கள். ஆயின் அவை இன்று கிடைப்பதில்லை. மக்கள் வலுவற்றவர்களாக ஆகின்றார்கள். எப்படியோ உண்டி-உடையுடன் வாழ்ந்தால் போதும். சுதந்திரம் போனால் போகட்டும் என்று ஆட்சியின் அதிகாரத்திற்குத் தலை சாய்க்கின்றார்கள்.



மக்களாட்சியிலுள்ள இந்தக் குறைபாட்டை நீக்கி மக்களுக்கு உண்டியும் உடுக்கையும், சுதந்திரமும் கொடுத்து உலக நீதி தழைக்கும் விதம் வழிவகுக்கக் கூடியது கிராம ராஜ்ய முறை. கிராமம் என்ற உடனேயே இன்றுள்ள நிலையே மனக்கண் முன் தோன்றுவது இயற்கை. கட்சிப் பிரிவுகள், வறுமை, அறிவின்மை இவை நிறைந்து நிற்பதே இன்றைய கிராம நிலை. கிராம ராஜ்யத்தால் இந்நிலையே நிலைக்கப்படப் போவதானால் அதைக் கண்டு மக்கள் வெறுளவும் செய்வார்கள். கிராமங்கள் கிராமங்களாகத்தான் இருக்கும். ஆயின் புது கிராமங்களின் பொருளாதார அரசியலமைப்பில் அவை மாறுபட்டே நிற்கும். இன்றைய கிராமங்களுக்கும், கிராம ராஜ்ய கிராமங்களுக்கும் யானைக்கும் பூனைக்குமுள்ள வேறுபாடு உண்டு.

முற்றுமான சுதந்திரம், சமத்துவம் இவைகளை நாம் அடையவேண்டுமானால் ஆட்சியமைப்பு பற்றும் நீதியை அடிப்படையாகக்கொள்ளும் சமுதாயத்தை நாம் நிறுவிக் கொள்ளவேண்டும். நீதியில் அவ்வளவு பற்று உண்டாகும்வரை அரச நீதியை ஏற்றுத் தான் ஆகவேண்டும். ஆயின் அரசாட்சியும் எவ்வளவு குறைவு பட்டிருக்குமோ அவ்வளவிற்கு நல்லதாகும். ஒரு புறம் நீதி உணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டும், மற்றொருபுறம் கட்டுப்பாடுகளைக் குறைத்துக் கொண்டும் செல்ல ஜனநாயகத்தில் இடம் உள்ளது.

மனிதனது நினைவு, செயல் திறன் இவைகளைக் கொண்டு பார்த்தால் ஒருவன் இரண்டு மூன்று நூறு பேர்களுக்கு மட்டுமே பிரதிநிதியாக இருக்கமுடியும். அப்பொழுதே பிரதிநிதிக்கும் அவரை தேர்ந்தெடுப்போருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும். பிரதிநிதி தன் கடமையில் வழுவும் பொழுது அவனைக் கட்டுப்படுத்துவது சுலபமாகும்.

இரண்டு, மூன்று, நூறு பேர்களுக்கு ஒரு பிரதிநிதி. சபையில் உள்ள பிரதிநிதிகள் எல்லாம் எல்லா விஷயங்களையும் ஆராயவும், சர்ச்சைகளை நடத்தவும் வேண்டுமானால் ஒரு கிராம சபையில் பத்து பதினைந்து பிரதிநிதிகள் இருக்கவேண்டும். அதற்குக் குறைந்திருந்தால் பிரச்னைகளை அவர்கள் அறுதி ஆராய்வது கூடுவதில்லை. பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதற்கு அதிகமாவதிலும் பயனில்லை. சிலர் விஷயங்களில் அக்கரை கொள்ளாமல் நின்று விடுகின்றார்கள். இவ்விதம் கணக்கிட்டால் கிராம எல்லையில் மூவாயிர நாலாயிர மக்களே இருப்பார்கள். அவ்வளவு பேர்கள் இருக்கும் கிராமங்களில் கிராம ராஜ்யம் எளிதிலும் முறையாகவும் அமையும்.

# ★ சாம்ய யோக சூத்திரம் (3) ★

## ஆச்சார்ய வினோபா

(முன் இதழின் தொடர்ச்சி)

### சம்பிரதாயங்களின் வரம்பும் பொருளும்

சம்பிரதாயங்கள் (conventions) கொள்கைகள் (Notions) கருத்துக்கள் (Ideas) ஆகியவை மனத்தையேப்பற்றி நிற்பன. கடமையுணர்ச்சி (sense of duty) வேறு இருக்கிறது. நான் பாரமார்த்திக நோக்குடன் சிந்திக்கத் தொடங்குகையில் கடமையுணர்ச்சி முழுவதும் தவறென உணருகிறேன்; சில சரி, சில தவறு என்று அல்ல. இக்கடமையுணர்ச்சி சில கொள்கைகளை, அதாவது நாம் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சார்ந்திருப்பது. அக்கொள்கைகளை நாம் நம்புகையில் அவை சரியாகவும், நம்பாதபொழுது அவை தவறாகவும் ஆகின்றன.

இலட்சுமணன், தான் தசரதர் மகன் என்ற எண்ணங்கொண்டிருந்தால் இராமனுடன் காட்டிற்குப் போயிருக்க மாட்டான். இராமன் அவனிடம், 'நீ தசரதர் மகனாகையால் அவருக்கு உதவியாக இங்கேயே இரு. அதுவே உனக்கு நல்லது' என்று சொல்லவும் செய்தார். அவன் இராமனுடன் காட்டிற்குச் செல்லாது, 'நான் தந்தையின் மகன். அண்ணன் காட்டிற்குப் போவதால் இங்கே இருந்துகொண்டு பரதனுக்கு உதவுதலும் என் கடமையே. அது தந்தைக்கும் பிடித்தமானது' என்று எண்ணி அயோத்தியில் தங்கியிருந்தால் நடுவு நிலைமையில் உள்ள வால்மீகி அதையும் வியந்தே கூறியிருப்பார். எந்தக் கடமையுணர்ச்சியினாலேனும் ஒருவர் ஒன்றைச் செய்தால் அவர் புகழுக்குரியவரே. ஒன்றின்மீது ஒன்றாகத் தளங்கள், படிகள் பல உள்ளன. ஒருவன் தானுள்ள நிலையில், படியில் இருந்தவாறு, கடமை தாண்ட காரியம் செய்தல் நல்லதே. இலட்சுமணன் தான் தசரதர் மகன் என்று கருதியிருப்பின் அவன் கருத்து தவறாகாது. ஆனால் அவன் தன்னை இராமன் தம்பியென்றே கொண்டான். பார்க்கப் போனால் தசரதர் மகன் என்பதும் இராமன் தம்பி என்பதும் வெவ்வேறல்ல; இவற்றினிடையே முரணில்லை. ஆனால் இராமன் கட்சி, தசரதர் கட்சி என்று கட்சிகள் இரண்டு தோன்றுகையில் அவற்றினிடையில் ஒன்றை ஏற்கவேண்டி வருகிறது. அப்பொழுது இரண்டையும் பற்றிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இதையோ அதையோ ஏற்றால்தான் மேலே காரியம் நடக்கும், ஒரு முடிவு ஏற்படும். இலட்சுமணன், 'நான் இராமன் தம்பி' என்ற முடிவுக்கு வந்ததும் பிரச்னை தீர்ந்தது. இது அவனது கொள்கையின் விளைவு. அவன் தன்னை தசரதர் மகனென்று கொண்டிருந்தால் அதுவும் சரியென்றே கருதப்பட்டிருக்கும். எனவே கடமையுணர்ச்சிகள் அனைத்தும் கொள்கையைப் பொறுத்தவை.

### பரம சாம்ய வழி

கொள்கையென்பது முற்றிலும் சரியென்பதல்ல, ஒருவாது சொந்தக் கொள்கை என்ற வகையில் ஒன்று அதிகம் சரியாயிருக்க, இன்னொன்று அவ்வளவு சரியாக இராது, இன்னொன்று முற்றிலும் தவறாகவும் இருக்கும். ஆனால் கடமையுணர்ச்சி என்ற சுமை நம் தலைமீது இருக்கவே வேண்டாம், தலையில் ஒரு மயிரும் இல்லாது மழுங்க மொட்டையடித்துவிட வேண்டுமென்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்!



"உனக்குக் கடமையே இல்லை. நீ கடமைகளைக் கடந்தவன்" என்று தன் சொரூபத்தை உணருகையில் உணர்ச்சி பற்றிய தடைகளெல்லாம் குறுக்கிடுகின்றன. மேலும் புத்தியின் தடைகள் வேறு வருகின்றன. 'நான் இவையனைத்தையும் கடந்தவன்' என்பதைப் புரிந்து கொள்ளுதல் சிரமம். நாம் உணர்ச்சிகளைக் கடந்தவரென்று கொண்டால் வாழ்க்கை சாரமற்றதாய் வரண்டதாய்த் தோன்ற, புத்தியையும் கடந்தவரென்று கொள்கையில் நம் நிலை என்னவாகுமோ? எனவே இதை உணரும் விஷயத்தில் இத்தடைகளெல்லாம் வருகின்றன. எனவே மெல்ல மெல்ல அனுபவம், தைரியம், தவம் ஆகியவற்றின் உதவி கொண்டு ஒவ்வொரு தடையாக, திரையாக அகற்றவும் சிந்தனையும் மனனமும் செய்யவும் வேண்டும். அதற்கெனவுள்ள சாதனங்கள் அனைத்தின் உதவியையும் பெற வேண்டும். அதே சமயத்தில் 'நான் அது' என்று தொடர்ந்து சிந்தித்தும் வந்தால் நமக்கு அதன் அனுபவம் ஏற்படும்.

ரிஷி 'சிரத்தஸ்வ ஸௌம்ய' (நீ சிரத்தை அல்லது நம்பிக்கைக்கொள்) என்கிறார். மனிதன் சிரத்தை கொள்வதனால் தெம்பு பெறுகிறான். அவனுக்கு மெல்ல மெல்ல அனுபவம் ஏற்படுகிறது. மகாவாக்கியங்கள் குறித்து நன்கு சிந்திப்பதற்கு இது ஒரு சிறந்த முறையாகும். இதனால் மனிதன் உடல், மனம், இந்திரியங்கள், வாசனை, பாவனை, புத்தி ஆகிய அனைத்தையும் கடந்து தன்மூல நிலையை, பரம சாம்யத்தை எய்துகிறான்.

மகா வாக்கிய சிந்தனையென்பது நம் நாட்டிற்கே உரிய தனித்த முறை. இது நாம ஜபத்தைப் பெரும்பாலும் ஒத்தது. பக்தி மார்க்கத்தில் நாமஜப முறை போன்றதே வேதத்தில் மகாவாக்கிய சிந்தனை. நாம ஜப முறை சுலபமானது. அது பலருக்கு உதவுவதாயுள்ளது, சமாதானம் அளிக்கிறது. வாக்கிய சிந்தனை முறையோ அகத்திலிருந்தும் உதவியளிப்பதாகும். எனவே இவ்விரு முறைகளும் ஒன்றையொன்று அடுத்து இருப்பவை.

### மகா வாக்கிய சிந்தனை ஆட்சி நீக்கத்திற்கு வழி

மகா வாக்கியத்தை இடையறாது சிந்திப்பதனால் என்னவாகுமென்றால் தத்: சாஸனமுக்தி: (ஆட்சி நீக்கம் அதனால் வரும்) சாஸன முக்தி (ஆட்சி நீக்கம்) என்ற சொற்றொடரை நான் அதிகம் கையாண்டிருக்கிறேன். நான் முதலில் அறியாமையினால் 'சாஸன ஹீன்' (ஆட்சிஇன்மை) என்ற சொல்லையே உபயோகித்து வந்தேன். ஆனால் பிறகு ஆராய்ந்ததில் இந்தச்சரியான சொல் கவனத்திற்கு வரவே இதை இச்சூத்திரத்தில் சேர்த்தேன். 'கீதைப் பேருரைகளில்' இதைவிளக்கும் முகத்தான் சிறிய விஷயமொன்று சொல்லியிருக்கிறேன். "மனிதன் தன்னை உடல், மனம், அறிவு ஆகியவற்றிலிருந்து வேறென உணர்தல் பயனுள்ளதாகும். உடல் வேறு தான் வேறென்று கொள்கையில் துஷ்டர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது போகும். உங்களுக்கு தம் உடலில் பற்றிருப்பதனாலேயே துஷ்டர்கள் உங்களிடம் கைவரிசையைக் காட்டுகிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு உங்களை அச்சுறுத்துகிறார்கள். ஆயுதங்களை அமைத்து அடக்கத்திட்டமிடவே மனிதன் பயந்து போகிறான்." ஆனால் மகா வாக்கியத்தை நன்கு இடையறாது சிந்திக்கையில், நான் சிறிய உருவினனல்ல என்று தெரிய வருமாகையால் சிறிய உருவை அழித்து விடுவதாய் அச்சுறுத்துவது பயன்படாது போகும். பிறகு எந்த துஷ்டனும் உங்களை

அடக்கியாள முடியாது. ஆனால் இது இச்சூத்திரத்தின் முக்கியமான பொருளல்ல. முக்கியமான பொருள் நீங்கள் மனத்தின் ஆட்சிக்கு அடங்கியிருத்தல் கூடாது என்பதே.

இன்று மனித வாழ்க்கை மனத்திற்கு அடங்கியே நடந்து வருகிறது. மக்களென்னவோ, 'நாங்கள் சுதந்திரர்கள்; எவர் கட்டளையையும் மதிக்கமாட்டோம்' என்று சொல்லிய போதிலும் அவர்கள் எப்பொழுதும் மனம் ஏவுகிற படியே நடந்து வருகிறார்கள். பெயரென்னவோ சுதந்திரமான விருப்பமென்று சொல்லிக் கொண்ட போதிலும் நடவடிக்கை மனத்திற்கு, தன் மனத்திற்கு அடிமை புரிவதாகவே இருக்கிறது. மனிதன் சுதந்திரமென்று தவறாக எண்ணிக் கொண்டிருப்பினும் அவன் வாழ்வது அடிமை வாழ்வே. "நாம் சுதந்திரர். எவர் சொல்லையும் மதியோம்" என்பதற்கு புறத்தே பரவியுள்ள நம் வெளி உரு வேறு நாம் வேறு என்று கொள்கிறோம், நாம் நம்மைக் குறுக்கிக் கொண்டுவிட்டோம் என்பதே பொருளாகும். எவர் வார்த்தையையும் கேட்கமாட்டேன் என்று சொல்லுவதானால், மனத்தையும் மதியாதிரேன். உன் மனத்தை விட பிறர் அதிக அறிவுள்ளவர்களாய் இருக்கலாமாகையால் பிறர் சொல்வதைக் கேட்பதில்லையென்பதற்கு பிறர் அறிவாளிகளாயிருந்தும் அவர் சொல்லுவதைக் கேட்பதில்லை, என் மனத்தின் ஏவலையே கேட்கிறேன் என்று ஆகும். என் கையில் தென்பில்லை; அது என் உடலின் ஒரு பகுதிதான். ஆனால் தன் கையே தனக்குதவி என்ற செருக்கினால் என் கையினாலேயே எதையும் செய்வதென்று நானிருப்பதில்லை. நான் என்பது யார்? இந்தக் கையா நான்? இக்கை முடமாகி விடுகையில் பிறர் கையும் என் கைகளே என்று கொள்ளும் அறிவு எனக்கிருக்க வேண்டும். ஆகையால் என் வலுவில்லாத கையைக் கொண்டே எதையும் செய்வதென்றிராது, பிறாது வலுவான கையின் உதவியையும் பெறுகிறேன். இது அறிவின் விளைவு. எந்நிலையிலும் தன் கையே தனக்குதவி என்று இருத்தல் அறிவின்மையே. இதே வகையில் பிறாது தெம்புள்ள அறிவின் உதவியைப் பெற மறுத்து, தன் மனத்தின் ஏவலையேக் கேட்டலும் அறிவின்மையே. விருப்பம் அழிந்ததும் அது சுதந்திரமாகிவிடுகிறது என்பது விசித்திரமான சுதந்திர விருப்பமே!

## மனத்தின் அடிமைத்தனம்

டால்ஸ்டாயின் 'நம் காலத்தின் அடிமைத்தனம்' (Slavery of our Times) என்ற நூல் என்னைப் பெரிதும் ஆட்கொண்டது. அவர் அதில், 'சுதந்திரம் வந்ததென்றால் அது பெயரளவுக்கே வருகிறது, அது உண்மையில் பழைய அடிமைத்தனம் போய் சுதந்திரம் என்ற பெயரில் புதிய அடிமைத்தனம் வந்ததேயாகும். மக்களென்னவோ தாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம், பெரியதொன்றைச் சாதித்துவிட்டோம், அடிமைத்தளையிலிருந்து விடுபட்டோம் என்று எண்ணுகிறார்கள் ஆனால் அவர்கள் பழைய அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு சுதந்திரமென்று ஏற்றிருப்பது சுதந்திரமல்ல புதிய தளையே, என்று சொல்லியிருக்கிறார். பல சமயங்களில் நாடுகளின் விஷயத்தில் நடப்பது இதுவே. இத்தாலியிலும், ஜப்பானிலும் சுதந்திரம் ஏற்பட்டதும் அவை அடிமைத்தனத்தைத் தொடங்கிவிட்டன!

நம் நிலைமையும் இதுவே. நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம், இனி நம் விருப்பம்போல் நடந்து கொள்வோம் என்கிறோம். ஆனால் அவ்விருப்பம் உங்களுடையதா, வேறு ஒருவருடையதா? விருப்பம் உங்களுடையது அல்லவே அல்ல. விருப்பமெதுவும் மனத்தினுடையதே. நீங்கள் விருப்பத்தைக் கடந்தவர்கள். விருப்பம்போல் நடந்து கொள்ளுதலென்பது மனம்போல நடத்தலே. மனம் என் ஏவலாள். நான் என் விருப்பம்போல் நடத்தல் என்பது என் ஏவலாளின் விருப்பம்போல் நடப்பதே. என் அயலான் என்னைவிட அறிவாளியாயிருந்தும் நான் அவன் சொல்வதைக் கேளாது என் வேலையாள் சொல்லுகிறபடியே நடக்கிறேன். அவன் என் வேலையாளாயிருப்பதே காரணம். வேலையாள் சொல்லுவதைக் கேட்டு அவமானமுறலாமென்றால், அயலான் சொல்லுகிறபடி ஏன் நடக்கக் கூடாது? ஆனால் நாம், அயலானும் நாமும் ஒன்று என்றுகொள்ள மறுத்து, வேலையாளை நம்மவனென்று கொண்டிருக்கிறோம். இவ்வகையில் நாம் நம் வேலையாளுக்கு அடிமையாயிருக்கிறோம். இதே வகையில்தான் எஜமானரெல்லாம் தம் அடிமைகளின் அடிமைகளாயிருக்கிறார்கள்.

இவ்வகையில் சுதந்திரமென்று சொல்லிக் கொண்டு நாம் ஏதோ ஒரு வகையான அடிமையாக இருந்து வருகிறோம். எனவே இந்த அடிமைத்தனங்களிலிருந்து விடுபட்டாக வேண்டும். மகாவாக்கியங்களின் சிறப்பு அவற்றை இடையறாது சிந்திப்பதனால் அவை நம்மை மலையின் உச்சியில் கொண்டு போய் சேர்த்து விடுகின்றன. தத்துவமசி என்று சொன்னதும் அது உச்சிப் படியில் நம்மைக் கொண்டு சேர்க்க, அதனால் ஆட்சி நீக்கம் பூர்ணமாய் ஏற்பட்டுவிடுகிறது. நம்மை சமூகமோ தனி மனிதனோ, வாசனைகளோ, எந்த உயிருமோ ஏவமுடியாது போகிறது; பூரண ஆட்சி நீக்கம் ஏற்பட்டுவிடுகிறது

(தொடரும்)

★



## சிறையில் மட்டுந்தானா திருடர்கள்?

கீதா பிரவசனம் ஆண் கைதிகள் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டது.
ஆனால் சிறை அதிகாரி பெண்களுக்காகவும் பேசும் உரிமையைக் கொடுத்
தார். அவர் 'வினோபாவை ஆண் என்று கொள்வதற்கில்லை' என்றார்.
பிறகு சாதாரணக் கைதிகளின் கோரிக்கையை ஒட்டி, அவர்களுக்கும்
ஒரு மணி நேரம் போதிக்க அனுமதி கொடுக்கப்பட்டது. அச்சமயம்
கீதாயி—(மராத்தியில் அடிகள் செய்த கீதை மொழிபெயர்ப்பு) அச்சா
கியது. அதனைப்பெற ஒவ்வொரு கைதியும் தானா அளித்தார்கள்.
எனக்கு அரசியல் கைதி சாதாரணக் கைதி என்ற வேற்றுமையில்லை.
எவனும் இயற்கையாகவே திருடனில்லை. வேண்டுமென்றே சிலரைத்
'திருடன்' என்று சிறை வைப்பதுமுண்டு. சிறைக்கு வெளியே திருடர்
கள் இல்லையா? அவர்கள் உருமாறி முதலாளிகளாகத் திகழ்கிறார்கள்.
கைதிகளின் உள்ளத்தும் இவ்வளவு பக்தியைக் கண்டு மகிழ்கின்றேன்.

வினோபா

# பைபிளில் விவசாய சமுதாயம்

இஸ்ரேல் நாட்டில் 'கிபுட்ஸ்' 'மொஷாவ்' என்று கிராம பொதுவுடைமை சமுதாயங்கள் நடக்கின்றன. இவை ஒரு விதத்தில் கிராம தானம் மூலம் நாம் கோரும் கிராம சமுதாயங்களைப் போன்றவை. இவைகளை நேரில் பார்த்த ஸ்ரீ ஜெயப்ரகாஷ் நாராயண் புகழ்கிறார். நிலப் பொதுவுடைமையைப்பற்றி பைபிளில்—விவிலிய நூல் ஜூபிலி என்று விரிவாகக் கூறுகிறது. இதைப்பற்றிய ஒரு கட்டுரை 1954 செப்டம்பர் சர்வோதயத்தில் வெளிவந்துள்ளது. இஸ்ரேல் நாட்டு "Work" என்ற பத்திரிகையில் சமீபத்தில் வந்தக் கட்டுரையை இஸ்ரேலுக்குச் சென்றிருக்கும் திரு அ. அவையன், M. A. அன்புடன் சர்வோதய வாசகர்களுக்காக மொழி பெயர்த்து அனுப்பியதை வெளியிடுகிறோம்.

---

பைபில் கூறும் சட்டங்களும் யோசனைகளும் சமுதாயம் எப்படி இயங்க வேண்டும் என்பதைப் பற்றியவைகளே ஆகும். இது வெவ்வேறான—ஆனால்— ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட, இரண்டு வகையில் கூறப்பட்டிருக்கிறது. முதலாவதாக, இது சமுதாய ஒழுக்கத்தை நிர்ணயிக்கிறது; இரண்டாவதாக தனிப்பட்ட மனிதன் மற்றவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது. இவை இரண்டுமே நீதிநெறி, மதம் ஆகியவைகளின் கோட்பாடுகளையும் மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவதின் அடிப்படைச் சுவர்தானே முதலாவது. ஆகையால் முதலாவதை முதலில் ஆராயலாம். விவிலிய நூலின் சட்டம், சமுதாயத்தை விவசாய சமுதாயம் என்றுதான் நோக்குகிறது. விவசாய சமுதாயத்துக்கு அடிப்படை நில உடைமைதான்.

## குடும்பப் பண்ணை

ஆதிகால கிழக்கத்திய சமுதாயங்கள் எதுவும் நிலத்தை வெறும் விற்க—வாங்கத் தக்க ஒரு பொருளாக நினைக்கவில்லை; ஒரு குடும்பத்தின் அல்லது ஒரு கூட்டத்தின் மாற்றமுடியாத உடைமையாகத்தான் கருதின. ஏனென்றால் அக்குடும்பத்தின் பிழைப்பு மட்டுமல்ல, அதற்கும் சமுதாயத்துக்கும் உள்ள இணைப்பே நிலத்தின்மேல்தானே இருக்கிறது! அதுமட்டுமல்ல ஒரு குடும்பப்பண்ணை என்றால் அக்குடும்பத்தின் வாசஸ்தலமும் அதுதான். ஆகவே, நிலம் போய்விட்டதென்றால், குடும்பமே அழிந்து விட்டது என்று அர்த்தம்; சமுதாய அமைப்பின் ஒரு அங்கம் போய்விட்டது என்று அர்த்தம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தமான நிலம் இருப்பதாகவும், அது பிள்ளை பிள்ளை தலைமுறையாக வந்து கொண்டிருப்பதாகவும் விவிலிய நூல் கருதிற்று. ஆகவே, சமுதாயம் வர்க்கரீதியாகப் பிரிக்கப்படவில்லை. கொள்கை அளவிலாவது, தேசத்தின் எந்த ஒரு பாகமும் தன்னுடைய பிழைப்பிற்காக மற்ற பாகத்தை அண்டியிருக்கவில்லை; ஒவ்வொரு பாகமும் தன்னுடைய



சொந்த நிலத்தில் சொந்த உழைப்பால் வாழ்ந்து வந்தது. (இப்படித்தான் பைபில் காலத்தில் இருந்தது. இந்த அனுமானத்தில்தான் விவிலியநூல் தன்னுடைய சட்டத்தையும் வகுத்திருக்கிறது.)

## ஐம்பதாண்டுக்கு ஒரு ஜூபிலி

மேலே கூறப்பட்டது லட்சிய காரியங்கள் ஆனால் இது எப்படியோ மாறக்கூடிய நிர்ப்பந்தம் வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். சந்தர்ப்ப பேதத்தால் அதிர்ஷ்டக்கட்டையான விவசாயிகள் தங்களுடைய நிலங்களை விற்க வேண்டியதாகப் போய் விடுகிறது; அல்லது கடன் கொடுத்த காலகண்டர்களால் துரத்தப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், நிலமில்லா ஏழைகள் உண்டாகக்கூடும். இவர்களைப் பெருநிலக் கிழவர்கள் சுரண்டுவார்கள்; "உள்ளவன்", "இல்லாதவன்" என்றும் "எல்லாம் வல்ல நில முதலாளி" "ஒன்றுக்கும் இயலாத ஏழைகள்" என்றும் நாடு பிரிபட்டுப் போய்விடும். இந்த நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும். இல்லாவிடில், சமுதாய ஒழுங்கின் அடிப்படை தகர்ந்துவிடும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டுதான் "ஐம்பதாம் ஆண்டுக் கொண்டாட்டம்" (ஜூபிலி) என்னும் வைபவத்தை விவிலிய கர்த்தாக்கள் புகுத்தியிருக்கிறார்கள்.

## நிலமெல்லாம் திருப்பிக் கொடுக்கப்படும்

இதன்படி, அன்று, எல்லா நிலங்களும் அதனுடைய ஆதி சொந்தக்காரனுக்கோ, அவனுடைய வாரிசுதார்களுக்கோ திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். அதே போல் யூத அடிமைகளையும் அடிமைத் தளையிலிருந்து விட்டுவிட வேண்டும். அதாவது, அவர்களை அவரவர்களது சொந்த வீட்டுக்கு அனுப்பி விடவேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? நிலத்தை சாசுவதமாக விற்கமுடியாது; அது தனது வார்சுதாரனுடைய சொத்தாகவேதான் இருக்கும் என்று தெரிகிறதல்லவா? ஐம்பது வருஷத்துக்கு ஒரு தடவை சமுதாயம் பழையபடி மாற்றி அமைக்கப்பட்டு, மறுகுத்தகைக்கு விடப்படுவது போல் ஆகிறது. எந்தவித துரதிர்ஷ்டத்தினால் இழந்தாலும் சரி, ஒவ்வொருவனும் மறுபடியும்தன்னுடைய வாழ்க்கையைச் சுதந்திரமாக, சொந்த சொத்துடன் ஆரம்பிக்க வசதி (வாய்ப்பு) அளிக்கப்படுகிறான். விழாவின் நோக்கம் இழந்த நிலத்தைத் திரும்பத் தருவது மட்டுமல்ல; அவனுடைய குடும்பப் பண்ணையைத் திருப்பித் தருவது மட்டும் அல்லாமல் அவனையே அவ்வுடைய குடும்பத்துக்குத் தந்ததாகுமல்லவா? நிலத்திற்குத் திரும்ப வந்துவிட்டதால், கிராமக் குடும்பத்துக்குத் திரும்ப வந்துவிட்டான் என்றும், சமுதாயக் கட்டுக் கோப்பில் ஒரு அங்கமாகி விட்டான் என்றும் ஆகிவிடுகிறதல்லவா? இந்த அடிப்படையில் தான் சமுதாயம் தனிமனிதர்களிடம் என்னென்ன எதிர்பார்க்கிறது என்ற பிரச்னையையும் பார்க்க வேண்டும். உதாரணமாக "சங்கடத்தில் இருக்கும் சகோதரனுக்குச்

சகாயம் பண்ணு", "அவனுக்கு உணவு அல்லது பணம் கொடு" "உன் அயலானை உன்னைப்போல் நேசி" இவைகளை எல்லாமே அந்தக் கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும்.

மேலே கூறிய கடமைகளெல்லாம், பார்க்கப்போனால், தன்னுடைய சொந்தக்காரனுக்குத்தான். ஏனென்றால் அந்தக் காலத்தில் சொந்தக்காரன்தானே அண்டை வீட்டுக்காரனாக இருந்திருக்க முடியும்! ஆனால், தற்கால மேற்கத்திய நகர சமுதாயத்தில் அண்டை வீட்டுக்காரர் உண்மையிலேயே அயலாராக இருப்பார். அப்படியானால் மேலே கூறிய விதிகள் எல்லாம் அதிகப்படியாகத் தெரியலாம். ஆனால், ஒருவன் சொந்தக்காரர்களுக்கு மத்தியில் வசிக்கிறான் என்று வைத்துக் கொண்டால் மேலே கூறிய விதிகளை எல்லாம் அதிகக்கடுமையாசப் பின்பற்ற வேண்டும்போல் இருக்கிறது!

ஆகவே, உண்மையான "அயலார்களுக்கு"—வேறுநாடுகளில், ராஜ்யங்களிலிருந்து வந்தவர்களுக்கு, அதுவும் வழக்கமாகத் தப்பி ஓடி வந்து, பிழைக்க வந்தவர்களுக்கு, பந்துக்கள் அல்லாதவர்கள் மத்தியில் வாழ்பவர்களுக்கு—விசேஷமான சலுகைகள் அல்லவா கொடுக்கப்பட வேண்டும்! ஏனென்றால், அவன் இருவகையில் பாதிக்கப்படுகிறான். நெருக்கமாக இணைக்கப்பட்ட சமுதாயத்தின் மத்தியில் தான் ஒருவனே ஒரு அயலானாக வாழ்வதால் மற்றவர்களால் வித்தியாசமாக நடத்தப்படுவான்.

## அண்டை அயலாரைக் காக்கும் விதி

மற்றொன்று, நிலங்களெல்லாம் பரம்பரையாக அந்தந்தக் குடும்பத்தால் அனுபவிக்கப்பட்டுவருவதால், இவனுக்கு நிலம் கிடைக்காது; மற்றவர்களை அண்டிப்பிழைக்க வேண்டிவரும்; அதனால் சுரண்டப்படுவான். இதனால்தான் பைபில் அயலாரைக் காப்பதற்கு விசேஷ விதிகளை வகுத்திருக்கிறது. அவனுடைய சூழ்நிலையை யாரும் பயன்படுத்தப் பார்க்கக்கூடாது. அவனை யாரும் அழுத்தவும் கூடாது. "நீ அவனை உன்னைப்போலவே நேசி" ஏனென்றால், உனக்கு ஒரு அயலானுடைய மனது எப்படி இருக்கும் என்று தெரியும். எகிப்தில் நீங்களெல்லாம் அயலார்களாக இருந்தீர்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டால்போதும்.

அயலார்களுக்கும் சட்டத்தில் சமத்துவம் இருக்கிறது என்பதை மிக அழுத்தமாக விவிலியநூல் வற்புறுத்துகிறது. "உனக்கும், உன்னுடன் வசிக்கும் அன்னியனுக்கும் ஒரே சட்டம்தான். ஆண்டவனுக்குமுன் உன்னைப்போல் அவனும் சமமானவனே." இது ஒரு அதிசயமான நெறியாகத் தெரிந்திருக்கலாம். ஆதிகால அண்டைய கிழக்கு நாடுகளுக்கு (ஐரோப்பியர்களுக்கு). ஏனென்றால் அப்பொழுது அவர்களுக்கு "சட்டத்தின் முன் சகலரும் சமமே" என்னும் கொள்கை தெரியாது; அப்பொழுது அன்னியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் சட்டபூர்வமாக அங்கிருந்ததில்லை.



## தன்னை தர்மகர்த்தாவாக எண்ண வேண்டும்

மனிதனுக்கு மனிதன் விருந்தோம்பல் குணத்துடன் பழக வேண்டும் என்ற வழக்கம் இருந்திருக்கும் அல்லவா? அதை அண்டிப் பிழைக்க வேண்டியிருந்தது அன்னியன். ஐம்பதாம் ஆண்டு வைபவத்தில் நிலங்களை எல்லாம் அந்தந்த சொந்தக்காரனுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று இருப்பது சட்டபூர்வமாக நிலத்தை வாங்கினவனின் சொத்துரிமையைப் பாதிக்கிறதுபோல் தெரியலாம். ஆனால், பைபிலில் சமுதாய வரம்பு ஒரு அளவுக்கு உட்பட்ட சொத்து வைத்திருக்க வேண்டும் என்பதுதான். நிலங்களெல்லாம் ஆண்டவனுக்குச் சொந்தமானது என்பதுதான் பைபிளின் சாராம்சம். ஆகையினால் தான் இந்த வாக்கியங்கள்: நிலம் என்னுடையது; நீங்களெல்லாம் என்னுடன் தங்கியிருக்கும் அயலார்கள்.

தனிப்பட்ட சொந்தக்காரன் ஒவ்வொருவனும் தன்னை ஒரு தர்மகர்த்தா என்று பாவித்துக்கொள்ள வேண்டும். நிலத்தை உபயோகிக்கும் உரிமையைத்தான் அவனிடம் கொடுத்திருக்கிறேன்; நில உரிமையை அல்ல. அந்த நிலத்தை உபயோகிக்கும் உரிமையையும் முழுதாக உனக்கே கொடுத்துவிடவில்லை. அது உனக்கு மட்டும் பாத்திரமல்ல. கதிர் அறுப்புச் சமயத்தில் ஏழைகளுக்காகவும் அன்னியர்களுக்காகவும் நிலத்தின் ஒரு மூலையை ஒதுக்கிவிட்டு அறுக்க வேண்டும். அறுத்தவுடன் நெல் பொறுக்கும் உரிமையையும் அவர்களுக்கு நீ விட்டுவிடவேண்டும். இது ஒரு தானம்கொடுப்பது அல்ல. அப்படியானால் நிலக்கிழவன் அவன் விரும்பின யாருக்கும் தானம் கொடுப்பான். தானம் பெற்றுக் கொண்டவன் கொடுத்தவனுக்கு நன்றியுள்ளவனாக இருக்க வேண்டிவரும். ஆகையினால்தான் மேலே கூறப்பட்ட பகுதியை (ஒதுக்கிவிட வேண்டியதை) தான் கொடுக்காமல் ஏழைகளுக்கே விட்டுவிட வேண்டும் என்று பைபிள் சட்டம் செய்திருக்கிறது. ஏழைகள் அவர்களுடைய சொந்த வெள்ளாமையை அறுத்துக்கொண்டு போவதுபோல் அறுத்தெடுத்துக் கொண்டுப் போகவேண்டும். இப்படி ஏழைகள் அனுபவிப்பதில் யாராவது தலையிடுவானானால் அவன் ஏழைகளின் சொந்த சொத்தைத் திருடின திருட்டுப்பயல் என்று யூத தர்மம் கூறுகிறது.

ஐம்பதாமாண்டு வைபவத்துக்கு முன் கைக்கொள்ள வேண்டிய விதிமுறைகளும் இருக்கின்றன. அதாவது ஐம்பதாமாண்டுவைபவத்துக்கு ஏழு ஏழாண்டுகள் கழியவேண்டுமல்லவா? ஒவ்வொரு ஏழாவது ஆண்டுக்கும் 'சாபத்' ஆண்டு என்று பெயர். அப்படியானால் ஒரு ஐம்பதாமாண்டு வைபவம் வருவதற்கு ஏழு சாபத் ஆண்டு வரவேண்டும்.

## ஏழுவருஷம் கழித்த பிறகு சாபத் ஆண்டு

ஒவ்வொரு சாபத் ஆண்டிலும் விவசாயிகள் பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். அதாவது காடுகரைகளை எட்டிக்கூடப்பார்க்கக்

கூடாது. அந்த வருஷத்தில் காடு கரைகளில் இருக்கும் வெள்ளாமைக்கு யாரும் தனிப்பட்ட உரிமையாளர் இல்லை. அது எல்லோருக்கும் சொந்தம். யாரும் அறுத்தெடுத்துக் கொள்ளலாம். இந்த விதியும் நிலம் கடவுளுடையது, மகசூலை நீ அனுபவிப்பதால் நீயே உரிமையாளன் என்று நினைத்துக் கொள்ளாதே என்று ஞாபகப்படுத்தத்தான். பார்க்கப் போனால் மற்ற வருஷங்களில் வரும் மகசூலில் பெரும் பகுதியை அவன் எடுத்துக் கொள்கிறான். ஏனென்றால் அவன் தன்னுடைய உழைப்பை நிலத்துக்குக் கொடுத்திருக்கிறான். ஆனால், சாபத் வருஷத்தில் அவன் உழைக்கவில்லை, ஆகையால் அந்த வருஷத்தில் நிலத்தில் என்னென்ன வளர்கிறதோ அவைகள் யாவருக்கும் சொந்தமாகிறது.

சாபத் ஆண்டின் இன்னொரு அம்சமும் கவனிக்கத்தக்கது. அதாவது ஒவ்வொரு சாபத் ஆண்டிலும் எல்லா கடன்களையும் ரத்துச் செய்துவிட வேண்டும். இதுவும் சொத்துரிமையைப் பாதிக்கும் சங்கதியாக நம் தற்கால மாந்தர்களுக்குத் தோன்றலாம். ஆனால் பைபில் இதை நியாயம் என்று உலகத்துக்கு அருளி இருக்கிறது. ஏனென்றால், பணக்காரன் தன்னுடைய மிச்சத்திலிருந்து தேவைப்பட்ட ஏழைக்குக் கொடுக்க மறுப்பதில் எவ்வித நியாயமும் இல்லை; உரிமையும் இல்லை. கடன் கொடுத்தால் ஏழு வருஷத்துக்கு ஒரு தடவை நிச்சயமாக இழக்க வேண்டி வருமே என்று நினைத்துக் கடன் கொடுக்க மறுத்தால் அவனுடைய செய்கை அபசாரமானது என்று கண்டிக்கப்பட்டு, தூற்றப்படுவான். இவ்வாறு தாராளமாகக் கடன் வழங்க வேண்டியவன் ஏழாவது ஆண்டில் தன்னுடைய அசலை இழப்பதோடு அல்லாமல், அதற்கான வட்டியையும் இழக்கவேண்டியவன் ஆகிறான். வட்டி வாங்குவதை மிகக் கண்டிப்பாகத் தடை செய்திருக்கிறது பைபில்.

## உபயோகத்திற்கே உற்பத்தி; ஏற்றுமதிக்கல்ல

உற்பத்தி எல்லாம் ஏற்றுமதி அல்லது விற்பனைக்கல்ல; வீட்டு உபயோகத்துக்குத்தான் என்றிருக்கும் சமுதாயத்தில் பணம் வந்து ஒரு முதலீடு ஆகாது. ஆகவே அதைக்கொண்டு ஆதாயம் தேடுவதும் சரியில்லை அல்லவா? கடனாளி எதற்காகக் கடன் கேட்கிறான்? அடுத்த மகசூல் வரும் வரை சாப்பிடுவதற்கு அல்லது விதைவித்து வாங்குவதற்கு. இவ்வளவுதானே! ஆகவே, இதில் கடன் கொடுத்தவன் வட்டி கேட்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? அப்படிக் கேட்பானானால் கடனாளியின் உழைப்பின் பலனாகிய மகசூலில் ஒரு பகுதியைக் கேட்கிறான் என்று அர்த்தம். அந்த மகசூல் உற்பத்திக்கு இவன் ஏதும் உழைக்கவில்லையே! வட்டி வாங்கக் கூடாது என்னும் விதி அன்னியனுக்கும் பொருந்தும். வேண்டுமானால் அயல் நாட்டார் தன் பணத்தை முதலீடாக உபயோகித்து, இங்கு வியாபாரம் புரியும் அயல்நாட்டு வியாபாரி—வட்டி வாங்கலாம்.



பைபிலில் விதி செய்தபோது தொழிலாளிகளின் பாதுகாப்புச் சட்டத்துக்கு அவசியமில்லாமல் இருந்தது. கூலி செய்துதான் பிழைக்க வேண்டும் என்றிருந்த தொழிலாளியின் எண்ணிக்கை மிகமிகச் சுருக்கம். சில அன்னியர்களும், அதிர்ஷ்டக்கட்டையான சில தற்காலிக விவசாயிகளும்தான் கூலி செய்து பிழைக்க வேண்டிவந்திருக்கும். அவர்கள் தொகை சுருங்கி இருந்ததிலிருந்தே அவர்களுக்குக் கிராக்கி அதிகம் இருந்திருக்கும். அதனால் சுரண்டப்பட்டிருக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. அதனால்தான் "கூலி நிர்ணயம்" "வேலை நேர நிர்ணயம்" போன்ற சட்டங்கள் அக்காலத்தில் செய்யப்படவில்லை.

ஆனால் கூலியாட்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதற்கு விதி இருந்திருக்கிறது. "அதாவது கூலிக்கு வேலை செய்யவந்தவனை அழுத்தாதே; அன்றைக்கேக் கூலியைக் கொடுத்துவிடு-பொழுது விழுவதற்குள் கொடுத்துவிடு—ஏனென்றால் அவன் ஏழை; அவன் எண்ணம் அதில்தான் இருக்கும். தாமதமாக கூலி கொடுப்பதால் தொழிலாளி உணவுக்கு வழி இன்றி நாதியற்றுப் போவது மட்டுமல்ல, தடைசிதினக் கூலி வாங்கும் வரையிலும் அதே எஜமானுக்கு வேலைக்குப் போக வேண்டிவரும். இந்த விதமாகப் பொருளாதார ரீதியில் அண்டிப் பிழைக்கும்படி செய்வதைத்தான் பைபில் தடுக்கிறது. ஏனென்றால் இது தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதிக்கிறதல்லவா?

இதைத்தவிர இன்னொரு பைபில் விதியும் விவசாயியை—ஏன், எல்லோரையுமே காப்பாற்றுகிறது. அதாவது "நீ உன்னுடைய அயலானுடைய விளைந்து கிடக்கும் பயிர் நிலத்தில் நுழைந்தால், உன்னுடைய கைக் கொள்ளத்தக்கலை கதிர் பறித்துக்கொள்ளலாம்." இந்த விதியானது விளைச்சலில் ஒரு பாகத்தை ஏழைகளுக்கு விட்டு வைக்க வேண்டும் என்று வழிசெய்வதோடு, யாரும் தற்காலிகமாக நிலத்தை இழந்து பொருளாதார ரீதியில் அண்டிப் பிழைக்க வேண்டியவனாக ஆகிவிட்டாலும், வாஸ்தவத்திலேயே பட்டினிகிடக்க வேண்டாமல் பார்த்துக் கொள்கிறது.

பழைய நூலில், பண்டைய வாழ்க்கையில் உள்ள "நல்லதை" இன்றைய இஸ்ரேல் யூதர்களும் விட்டுவிடவில்லை. அத்தோடு தற்கால விஞ்ஞான அறிவையும் சேர்த்து ஒரு புது யுகத்தையே சிருஷ்டித்திருக்கிறார்கள்.

இதைப் பார்க்கும்போது 50 ஆண்டுகளுக்கு முன்பே வினோபாஜியை இஸ்ரேலர்கள் கண்டு பேசி கிராமதானம் என்றால் என்ன என்று புரிந்து கொண்டு செய்திருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அவ்வளவு அற்புதமாக இருக்கிறது இவர்களுடைய "கிபுட்ஸ்", "மொஷாவ்" "மொஷாவ் சிட்டுபி" எனும் கிராம அமைப்புகள்,

# பூமிதான நில வினியோகம்

## க. புதுப்பட்டியில் நில விநியோகம் :

கம்பம் : 6—1—59 க. புதுப்பட்டியில் பூமிதானமாகக் கிடைத்த 4 ஏக்கர் 15 செண்ட் நிலத்தை 9 நிலமற்ற ஏழை அரிசனங்களுக்கு, இவ்வூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே. எஸ். வெங்கடசாமி கவுடர் அவர்கள் தலைமை தாங்க ஊர்ப் பெரியவர்களின் முன்னிலையில் பிரித்து வழங்கப்பட்டது. பூதான ஊழியர் திரு. கு. ப. பரஞ்சோதி அவர்கள் நில வினியோக விதி முறைகளைப் பற்றிப் பேசினார். கொடுவை ஆசிரியர் திரு. சு. சண்முகநாதன் நில விநியோகப் பணியில் சிறப்பாக முன்னின்று உடனுழைத்தார்.

## பூதான நில விநியோகம் :

உத்தமபாளையம்: 9—1—59 சின்னஓவலாபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. P. R. இராசு அவர்கள் தலைமையில், உறுப்பினர் திரு. K. P. இராசு, கர்ணம் முத்துச்சாமி பிள்ளை, ஆசிரியர் திரு. பாண்டியன். அழகுத்தேவர், சி. வீரணத்தேவர், சினிக்காளை மற்றும் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் நில தானமாகக் கிடைத்த 102 ஏக்கரை 34 ஏழை நிலமற்ற விவசாயிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

சர்வோதய யாத்திரை: முதுகுளத்தூரிலிருந்து டிசம்பர் மீ 21ந் தேதி முதல் 30௳ முடிய கார்த்தி நிதி ஊழியர் திரு. பே. ஆதிநாராயணன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் நாடு சர்வோதய சங்க ஊழியர் திரு. S. பழனிச்சாமி, வெள்ளிவயக்கல் நாகசாமி, விளங்குளத்தூர் கருப்பையா ஆகிய ஊழியர்களும் கலந்துகொண்டார்கள். யாத்திரையில் 20 கிராமங்கள் சுற்றி அறுபதுமைல்கள் நடந்து, கிராம தானம், சர்வோதயம், சாந்திசேனை, சர்வோதய சம்மேளனம் பற்றி கிராமப் பிரச்சாரம் செய்தனர்.

பே. ஆதிநாராயணன்,
கோஷ்டித் தலைவர்.

## மதுரை தாலுகாவில் நில விநியோகம்

கழக்கள்ளந்திரி : டிசம்பர் 4-ந் தேதி மாலை 5–30 மணிக்கு பள்ளி மாணவ மாணவிகள் கிராமதானக் கோஷங்களை முழக்கியவாறு ஊர்வலமாகச் சென்று, இவ்வூர் மந்தைச்சாவடியின் முன்பாகத் தொடர்ந்து பூமிதானப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் மதுரை தாலுக்கா கிராமதான ஊழியர் திரு K. மாயாண்டி பூதான, கிராமதானக் கருத்துக்கள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் இவ்வூர் திருவாளர்கள் K. M. R. முத்து அம்பலம், வ. சு. ம. மந்தையனம்பலம், தியாகி சுந்தரராஜு, கு. மா. முத்து அம்பலம் முதலியவர்கள் பூமிதான மளித்த 2 ஏக்கர் 8 செண்டு நஞ்சை நிலங்களை 7 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பிரித்து வழங்கினார்கள்.

போய்கைக்கரைப்பட்டி : டிசம்பர், 12-ந் தேதி காலை 9 மணிக்கு நில வினியோகக் கூட்டம் கோட்டையனம் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் இவ்வூர் கிராமமுன்சீப் M. S. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள் நிலதானமளித்த 6½ செண்டு நஞ்சை நிலம் பிரித்து வழங்கப்பட்டது.



தேனூர் : டிசம்பர் 12-ந் தேதி இரவு 8–30 மணிக்கு ஹரிஜன சேவா சங்க ஊழியர் T. P. M. குருசாமி அவர்கள் தலைமையில் பூமிதானப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வூர் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. சாமுவேல் அவர்கள் கிராமதான ஊழியர் திரு. K. மாயாண்டி முதலியவர்கள், பூதான கிராமதானக் கருத்துக்களைப் பற்றிப் பேசினார்கள். அது சமயம் மதுரை ஆர். எட்டப்பன் அவர்கள் தானமளித்த 61 செண்டு நஞ்சை நிலம் இரண்டு நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டது.

உத்தங்குடி : டிசம்பர் 15-ம௳ மாலை 5–30 மணிக்கு பள்ளிமாணவ மாணவிகளும் ஊர் பிரமுகர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். ஊர்வலத்தில் பூதான, கிராமதானக்கோஷங்கள் முழங்கின. இரவு 7–30 மணிக்குக் கிராம தானப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. பிச்சை அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் திரு. ரெங்கனாதசுவாமிகள் வினோபாஜி வரலாறு பற்றியும் கிராமதான ஊழியர் K. மாயாண்டி அவர்கள் பூதான கிராமதானக்கருத்துக்கள் பற்றியும், கிராம மக்கள் ஒத்துழைப்பு இருந்தால் முன் காலத்தில் ராமராஜ்யம் எப்படி திகழ்ந்திருந்ததோ அவ்வாறு நம்தேசம் திகழ்ந்து உலகத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் என்றும் குறிப்பிட்டார். அது சமயம் இவ்வூர் பிரமுகர் திரு. அ. சோலைமலை அவர்கள் தானம் அளித்த 81 செண்டு நஞ்சை நிலம் இரு நபருக்கு பிரித்து வழங்கப்பட்டது. அ. சோலைமலை அவர்கள் நன்றி கூறினார்கள்.

மண்ணாடிமங்கலம் : டிசம்பர் 18௳ மண்ணாடிமங்கலம் கிராமத்தில் மாலை 7-30 மணிக்கு இவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சமையன் அவர்கள் தலைமையில் கிராம்தானப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. A. K. மணி, கிராமதான ஊழியர் K. மாயாண்டி முதலியவர்கள் பூமிதான கிராமதானக் கருத்துக்களைப் பற்றிப் பேசினார்கள். பின்னர் திரு. R. சிதம்பர பாரதி M. L. A., அவர்களும், திரு. ச. சங்கிலியாபிள்ளை அவர்களும் தானம் அளித்த நஞ்சை நிலம் 2 ஏக்கர் 50 செண்டை 8 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

அனைஞ்சியூர் : டிசம்பர், 25௳ காலை 7–30 மணிக்கு நில வினியோகக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் திரு. மூனுச்சாமித்தேவர், திரு. பாண்டித்தேவர் முதலியவர்கள் பூதானமாக அளித்த 6 ஏக்கர் 50 செண்டு நஞ்சை நிலங்களை 13 நபர்களுக்கு 50 செண்டு முறையே விநியோகிக்கப்பட்டது.

பொருசுப்பட்டி : டிசம்பர், 31ந் தேதி பொருசுபட்டிக் கிராமத்தில் பிற்பகல் இவ்வூர் திரு. S. S. V. தங்கச்சாமி அவர்கள் பூதானமாக வழங்கிய 1 ஏக்கர் 38 செண்டு நஞ்சை நிலங்களை 3 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

தோப்புலாம்பட்டி : ஜனவரி, 3௳ தொப்புலாம்பட்டி கிராமத்தில் காலை 7—30 மணிக்கு திரு. P. வேல்சாமி பிள்ளை அவர்கள் தலைமையில் நில வினியோகக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கிராமதான ஊழியர் திரு. K. மாயாண்டி நில வினியோக விதிமுறைகள்பற்றிப் பேசினார். பின்னர் இவ்வூர் நிலக்கிழார்கள் திரு. கருப்பண பிள்ளை, வேலுசாமி பிள்ளை, சின்னழகன், வத்தன் முதலியவர்கள் பூதானமாக வழங்கிய 6 ஏக்கர் புஞ்சை நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு திருவுளச் சீட்டு மூலம் வழங்கப்பட்டது.

கிராமதான ஊழியர்,
K. மாயாண்டி,

## பெரியகுளம் தாலுக்காவில் பூமிதான நில விநியோகம்

மேலச் சொக்கநாதபுரம்

போடி: 20—12—58ல் மேலச் சொக்கநாதபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மன்றத்தலைவர் திருவாளர் எஸ். எம். கந்தசாமி கவுடர் அவர்கள் தலைமையில், இவ்வூரில் பூமிதானமாக கிடைத்த 8 ஏக்கர் 6 செண்டு நிலத்தை மேலச் சொக்கநாதபுரத்திலும், தருமத்துப்பட்டியிலும், உள்ள 25 ஏழைக்குடும்பங்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டது. ஊர் பிரமுகர்களும், கிராம சேவக் திரு. சரவணப்பெருமாளும் ஒத்துழைப்பு நல்கினர்.

### உ. அம்மாபட்டி :

உத்தமபாளையம்: 23—12—58ல் உத்தமபாளையத்தை அடுத்துள்ள அம்மாபட்டியில் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. கருவத்தேவர் தலைமையில் இவ்வூரில் கிடைத்த 2 ஏக்கர் 70 செ. பூதான நிலத்தை நிலமற்ற 5 குடும்பங்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டது.

### மார்க்கையன்கோட்டை :

மார்க்கையன்கோட்டை: டிசம்பர், 24ம் தேதி 2 ஏக்கர் 19 செண்டு புஞ்சை நிலம், ஊராட்சி மன்றத்தலைவர் திரு. எம் அய்யர்தேவர் பி. ஏ., தலைமையில் 4 குடும்பங்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டது.

### குச்சனூர் :

டிசம்பர் 25ம் தேதி குச்சனூரில் 4 ஏ. 7 செண்டு பூதான நிலப்பங்கீடு விழா நடைபெற்றது. ஊர்ப்பிரமுகர்கள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### சின்ன ஒவுலாபுரம் :

பூசாரிக்கவுண்டன் பட்டி: சின்ன ஒவுலாபுரம் கிராமத்தில் தமிழ் நாடு சர்வோதய சங்கத்தலைவர் திரு. க. அருணாசலம் அவர்களால் தானம் கொடுக்கப்பட்ட 1 ஏ. 67 செண்ட் (கிணறும், தோட்டமும்) நிலத்தை இவ்வூர் ஆத்திராக்கப் பிள்ளைக்கு கு. ப. பரஞ்சோதி வழங்கினார்,

### B. மீனாட்சிபுரம் :

இவ்வூரில் பூதானமாகக் கிடைத்த 2 ஏ. 20 செண்ட் நிலத்தை 7 ஏழைகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. மாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில், ஊராட்சி மன்றத் தலைவர், திரு. பெருமாள்சாமி பிள்ளை தலைமையில் திரு. ஸ்ரீ ரமணன், திரு. ஆர். சேதுராமன் ஆகியோர்கள் உழைப்பின் உயர்வு, காந்திய சர்வோதய தத்துவங்களைப்பற்றியும் பேசினார்கள்.

### பூதிப்புரம் :

டிசம்பர், 16ல் மாவட்ட கழக உயர்நிலைத் துவக்கப்பள்ளியின் முன்பாக மாலையில் நடந்த சர்வோதயப் பொதுக்கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. அழகு சிங்கம் தலைமையில் சர்வோதய சங்கம் திருமங்கலம் வியாக் திரு. கோ. நடராசன், வட்டார சமூகக்கல்வி அமைப்பாளர் திரு. R. சேதுராமலிங்கம், சமூக நல ஊழியர் திரு. தொந்தி வில்லணன் ஆகியோர்கள் சர்வோதய கருத்தினைப்பற்றி சிறப்புற விளக்கினர்.

### B ரெங்கநாதபுரம் :

ஊர் பிரமுகர் திரு. T. R. இராமநாதன் செட்டியார் தலைமையில், 15 ஏ. 73 செண்ட் பூதானமாகக் கிடைத்த நிலத்தை 22 ஏழைகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. அவ்வமயம் திரு. க. சேது ராமலிங்கம், திரு. சரவணப் பெருமாள் ஆகியோர் பேசினார்கள்.

### இராசிங்காபுரம் :

ஊர்ப் பெரியோர்கள் முன்னிலையில் இவ்வூரில் பூமிதானமாகக்கிடைத்த 3 ஏ. 55 செண்ட் நிலத்தை 8 ஏழைகளுக்கு



பிரித்துக் கொடுக்கப்பட்டது. திரு. R. சேது ராமலிங்கம், திரு. தொந்தி வில்லணன், திரு. இரகுராம கவுடர், திரு. R. கருப்பணன் ஆகியோர்கள் உடனுழைத்தனர்.

### நாகலாபுரம் :

இவ்வூரில் பூமிதானமாகக் கிடைத்த 7 ஏக்கர் 59 செண்ட் நிலத்தை நிலமற்ற 14 ஏழை குடும்பங்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது. பின்னர் நாகம்மாள் நினைவு உயர்நிலைத்துவக்கப் பள்ளியில் நடந்த கூட்டம், சமூகக்கல்வி அமைப்பாளர் திரு. R. சேதுராமலிங்கம் தலைமையில், சிறப்பாக நடைபெற்றது. திரு. ஆர் பரமசிவ கவுடர் மற்றும் ஊர்ப் பெரியவர்களும் உடனுழைத்தனர். ஆசிரியர் திரு ஆங்கத்தேவர் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது.

எல்லாக் கூட்டங்களிலும் பூதான ஊழியர் திரு. கு. ப. பரஞ்சோதி கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

பண்ணைப்புரம் 28—11—58 மாலை 7 மணிக்கு இங்கு நடந்த சர்வோதய பொதுக்கூட்டத்தில் பூதானமாகக் கிடைத்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. பொதுக் கூட்டத்தில் வீ. அர்ச்சுனன் (தி. மு. க. செயலாளர்) முன் மொழிந்தார். திரு. ரங்காராஜன் (மாவட்டக் காங்கிரஸ் குழு உறுப்பினர்) பூதான ஊழியரை அறிமுகப்படுத்தி வரவேற்றுப் பேசினார். பின்னர் பூதான ஊழியர் திரு. கு. ப. பரஞ்சோதி பேசினார். திரு. ராகவராஜன் (கம்யூனிஸ்ட்கட்சி) நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. சர்வகட்சி அன்பர்களும் சிறந்தமுறையில் ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### நில விநியோகம் :

பழனி தாலுக்காவில் டிசம்பர் மாதம் 14, 15, 16 தேதிகளில் நமது மாகாண முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் தலைமையில் 115 ஏக்கர் நிலங்களை நிலமில்லாத 88 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. ஷை விநியோக வேலையில் ஸ்ரீமான், கே. லக்ஷ்மிபதிராஜ் எம். எல். ஏ. அவர்கள், ஸ்ரீ கருத்தப்பக் கவுண்டர், M. L. A. அவர்கள் முதலியவர்கள் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார்கள். பெரியகுளம் தாலுக்காவில் 13 கிராமங்களில் 57 ஏக்கர் 53½ செண்ட் நிலங்களை 135 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. மதுரை தாலுக்காவில் 19 குடும்பங்களுக்கு 6 ஏக்கர் நிலத்தை விநியோகிக்கப்பட்டது. மேலூர் தாலுக்காவில் பாத யாத்திரை நடைபெறும் கிராமங்களில் 21 குடும்பங்களுக்கு 52 ஏக்கர் நில விநியோகம் செய்யப்பட்டு இருக்கிறது. திண்டுக்கல் தாலுக்காவில் 60 ஏக்கர் நிலங்களை 28 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

## ★ பூதான—நிர்மாணச் செய்திகள் ★

### முதுகுளத்தூர் பகுதியில் கிராமதான பாத யாத்திரை.

வரும் சர்வோதய சம்மேளனத்தை முன்னிட்டு ஜனவரி மீ 13ல் முடிய கார்திகிதி ஊழியர் பே. ஆதிநாராயணன் தலைமையில் 3வது பாதயாத்திரை தொடங்கியது.

அது சமயம் T. N. S. S. சங்க ஊழியர் S. பழனிச்சாமி, திரு V. K. ஸ்ரீனிவாச அய்யங்கார், தொண்டர்

கருப்பையா, V. நாகசாமி ஆகியோர்கள் கலந்துகொண்டனர். 18 கிராமங்கள் சென்று சுமார் 60 மைல்கள் நடந்து பூதானம், கிராமதானம், சாந்திசேனை, ஆகிய சர்வோதயப் பிரச்சாரம் செய்து நடக்கவிருக்கும் மதுரை, ராமனாதபுரம் ஜில்லா சர்வோதய சம்மேளனம் பற்றியும் இப்பகுதி மக்களுக்கு எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்யப்பட்டது.

## கிராமதான பாத யாத்திரை :

1—11—58 முதல் ஆரம்பிக்கப்பட்ட 100 நாள் பாதயாத்திரை டிசம்பர் மாதம் முதல் தேதியிலிருந்தும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சென்ற 60 நாட்களாக 180 குக்கிராமங்களில் கிராமதானக் கருத்துப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது நத்தம் பகுதியில் யாத்திரைத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமுதாயநலத்திட்ட ஊழியர்கள், இப்பகுதியிலுள்ள இதர பிரமுகர்கள் யாத்திரையில் கலந்துகொண்டு உதவி செய்து வருகிறார்கள். தங்கள் கிராமங்களை கிராமதானம் செய்யும் நோக்கத்துடன் இதுவரை 6 கிராமங்களில் உள்ள கிராம மக்கள் கையொப்பம் பெற்று வருகிறார்கள்.

## கதர் வஸ்திராலயம் திறப்பு விழா

அம்பாசமுத்திரம் : தமிழ்நாடு சர்வோதய சங்கம் திருநெல்வேலி வியாக் அம்பாசமுத்திரம் காதி வஸ்திராலயத்தின் உபகிளை விக்ரமசிங்கபுரத்தில் 14-12-58ல் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு ஸ்ரீ கோமதி சங்கர தீக்ஷதர் M. L. A. அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தேசியக்கொடி ஏற்றப்பட்டது. பொதுப் பிரார்த்தனை நடைபெற்றது. திருநெல்வேலி வியாக் நிர்வாகி ஸ்ரீ T. கௌரி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஸ்ரீ கோமதி சங்கர தீக்ஷதர் M.L.A. அவர்கள் மிகுந்த கரகோஷங்களுக்கிடையே நாடாவைக் கத்தரித்து கதர் வஸ்திராலயத்தை திறந்து வைத்துப் பேசினார்.

மணிமுத்தாறு சர்க்கார் அம்பர் வித்யாலய பிரின்ஸ்பால் ஸ்ரீ [illegible]ஜன் அவர்கள் கதரின் பொருளாதாரத்தை விவரித்தார். நாகர்கோவில் வியாக் மானேஜர் ஸ்ரீ நடராஜன், வீரவநல்லூர், அம்பாசமுத்திரம், சிவந்திபுரம்—கிராமங்களிலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள், கதரன்பர்கள், பிரமுகர்கள் திரளாக வந்து கலந்து சிறப்பித்தார்கள். ரூ. 300 கதர் விற்பனையாயிற்று. மிகுந்த ஆதரவு விக்ரம சிங்கபுரத்தில் இருந்து வருகிறது. மண்டல காங்கிரஸ் உபதலைவர் ஸ்ரீ பாண்டி நன்றி கூறினார்.

M. ஆறுமுகம்,
நிர்வாகி.

## சர்வோதய விவசாயிகள் சங்கம் :

கம்பூர், கீடாரிபட்டி, மேலவளவு பகுதியிலுள்ள கிராம வாசிகள் தாங்களாகவே அங்கு சர்வோதய விவசாயிகள் சங்கம் அமைத்து அறிக்கை அனுப்பியுள்ளார்கள். இன்றுள்ள நிலையில் இச் சங்கம் அமைப்பது மிக அவசியம் என்பதை கிராம வாசிகள் பெரிதும் உணர்கிறார்கள்.

134078

Edited & Published by N. Ramaswami for Sarvodaya Prachuralayam of Akhila Bharat Sarva Seva Sangh, Tanjore.
Printed by Pulavar R. Ekambaranathan,
at the Co-operative Press, Tanjore Ltd., Tanjore.

# எமது காந்திய-சர்வோதய இலக்கியம்

## சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்

### ஆதாரக் கல்வி நூல்கள்

| | ரூ. ந பை. |
|---|---|
| துப்புரவு விஞ்ஞானம் | ... 0–50 |
| மலஜல சுத்தி | ... 0–50 |
| சர்வோதயத் திட்டம் | ... 0–50 |
| நீக்ரோ மஹான் புக்கர் வாஷிங்டன் சரித்திரம் | ... 0–50 |
| ஆதாரக்கல்வி என்றால் என்ன? | 1–50 |
| ஆதாரத் தொழில்—நூற்றல் | ... 1–00 |
| இன்றையப் பேச்சு—ஆதாரக் கல்வி | ... 2–00 |
| தோட்டவேலை ஆசிரியர் | ... 2–00 |
| பாடசாலை நோய்கள் | ... 1–50 |
| பிரார்த்தனைப் பாடல்கள் | ... 1–25 |
| முதல் வகுப்பு ஆசிரியர் | ... 1–50 |
| வாழ்க்கைக்கான கல்வி | ... 0–44 |
| என்ன உண்பது ? | ... 0–37 |
| களை | ... 0–25 |
| ஈ | ... 0–31 |
| வயல் கரை | ... 0–37 |
| தம்பீ, உனது தோல் | ... 0–31 |
| தம்பீ, உனது பல் | ... 0–37 |

### ஜே. ஸி. குமரப்பா நூல்கள்

| | |
|---|---|
| சர்வோதயமும் விஞ்ஞானமும் | ... 0–50 |
| காந்தியப் பொருளாதாரம் | ... 1–25 |
| ஐரோப்பாவின் படிப்பினைகள் | ... 0–37 |
| சர்வோதயமும் உலக அமைதியும் | ... 0–12 |
| உழைப்பின் தத்துவம் | ... 1–25 |

| | ரூ. ந பை. |
|---|---|
| இரும்புத் திரைக்குப் பின்னால் | 2–00 |
| விஞ்ஞானமும் முன்னேற்றமும் | 1–25 |
| டாக்டர் குமரப்பா வாழ்க்கை வரலாறு | ... 2–50 |

### இதர நூல்கள்

| | |
|---|---|
| பூர்ண சக்தி | ... 0–50 |
| உபவாச தத்துவம் | ... 0–50 |
| மருந்தில்லா வைத்தியம் | ... 0–25 |
| பகவத் கீதை (சங்கரன் பதிப்பு) | 1–25 |


### Bhoodan Literature

| | |
|---|---|
| Revolutionary Bhoodan | ... 0–37 |
| Sarvodaya Social Order | ... 1–00 |
| Gramdan – Why & How ? | 0–15 |
| Sampattidan | ... 0–30 |
| From Bhoodan to Gramdan | 0–75 |
| Sarvodaya and Business Community | ... 0–12 |
| Sarvodaya in Cities | ... 0–15 |
| Life of Vinoba | ... 0–25 |
| Bhoodan as Seen by the West | ... 0–75 |
| Sarvodaya and Communism | 0–40 |
| Why Gramraj ? | ... 0–50 |
| Progress of A Pilgrimage | ... 3–50 |
| Vinoba and His Mission | ... 5–00 |
| Swaraj Shastra | ... 1–00 |
| Class Struggle | ... 1–00 |
| Planning for Sarvodaya | ... 1–00 |
| Shanti-Sena | ... 0–50 |

எல்லா
காதி வஸ்திராலயங்களிலும்
கிடைக்கும்.

இதர விபரங்களுக்கு :
சர்வோதயப் பிரசுராலயம்,
தஞ்சாவூர்.

★ SARVODAYA ★
A Monthly Digest
Annual Sub : Rs. 4–50
Single Copy 37 nP.
Write to :
SARVODAYA, TANJORE



மகாத்மாஜியும் ராஷ்டிரபதி ராஜேன்பாபுவும்.